பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 15-10-61 ஞாயிறு | இதழ் 18

## கோப்பாயா, 'கோபே'யா?




இது அரசாங்கப் 'போட் பலகை' யல்ல; தமிழர்களால் நடாத்தப் படும் தமிழ்த் தினசரியின் தமிழோசை!

யாழ். தலைமைப்பீட சர்வாதிகாரத்தால்

# தமிழரசு கட்சியில் பிளவு வருமென எச்சரிக்கை!

## மட்டக்களப்புப் பிரமுகர் சொன்னது

சமீபத்தில் நடைபெறவிருக்கும் செனட்டர்கள் தெரிவில் தமிழரசுக் கட்சிச் சார்பிலும் ஒருவர் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு இருப்பதை வாசகர்கள் அறிவார்கள்:

இந்தச் செனட்டர் பதவிக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திரு. எம். மாணிக்கம் அவர்களை தாங்கள் நிறுத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும், இந்த முடிவு தடுப்புக்காவல் நிலையத்தில் வைத்தே செய்யப்பட்டதாகவும், டாக்டர் நாகநாதன் 'தினகரன்' நிருபருக்குக் கூறியதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

ஆனால், தடுப்புக்காவலிலிருந்த வேறு சில பிரமுகர்களை எமது நிருபர் இதுபற்றி விசாரித்ததில் செனட்டர் தெரிவு சம்பந்தமாக தடுப்புக்காவல் நிலையத்தில் எவ்வித தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லையென்றும், அத்தகைய ஒழுங்கான ஒரு முடிவுக்கு வருவதற்கு அங்கு ஏற்ற சூழ்நிலை இருக்கவில்லையென்றும் தெரிவித்தார்கள். முக்கியமாக மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. இராசதுரை வன்மையாக மறுத்துரைத்தார். "டாக்டர் நாகநாதனின் அறிக்கையை மறுத்து நீங்கள் ஒரு அறிக்கை விடுவீர்களா?" என்று எமது நிருபர் கேட்டபோது அதைப்பற்றித் தான் இப்போது யோசித்துக்கொண்டிருப்பதாகக் கூறினார்.

மட்டக்களப்பு தென்பகுதி (கல்முனை) 'தொகுதி நிர்ணய சபை'யின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டு அரசியல் உரிமை இழந்து நிற்பதாகவும், அதனால் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே செனட்டர் பதவியைக் கொடுக்கவேண்டுமென்றும்பெரும்பாலான மட்டக்களப்பு மக்கள் விரும்புவதாகவும் மட்டக்களப்பின் இன்னொரு தமிழரசு பிரமுகர் தெரிவித்தார்.

டாக்டர் நாகநாதனின் அறிக்கையைச் சுட்டிக்காட்டிய மேற்படி பிரமுகர் "யாழ்ப்பாணத் தலைமைப்பீடம் மட்டக்களப்பு மக்களின் விருப்பத்தையோ, த. அ. கட்சிக் கிளைகளின் அபிப்பிராயத்தையோ கேட்டறியாமல் சர்வாதிகாரப் போக்கில் நடக்க எத்தனிக்குமானால், இந்த நிலை வளர்ந்து கட்சிக்குள் பெரும் பிளவும் பூசலும் ஏற்பட இடமேற்படும் என்றும் எச்சரித்தார்,

கல்முனையைச் சேர்ந்த தமிழரசுப் பிரமுகர் திரு. அரியநாயகம் அவர்களைச் செனட்டராக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் அப்பகுதி மக்களிடம் இருப்பதாகத் தெரிகிறது.

### வானொலி பரபரப்பு!




அரசாங்க விரோத நடவடிக்கைகளின் சதிக்களமாக இலங்கை வானொலி நிலையம் மாறிவிட்டதென பிரதம வானொலி டைரக்டர் கூறினார்.

—பத்திரிகைச் செய்தி.

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**15-10-61 முதல் 21-10-61 வரை**

மேடம்: தேகசுகம்தொடர்ந்து பாதிக்கப்படும். குடும்பத்திலும் சில சச்சரவுகளும் காணப் படுகின்றன. பிரயாசம் அதிகமாக இருந்தாலும் போதிய வருவாயுண்டு.

இடபம்: மாதாவழி பந்துக்களால் கஷ்டங்கள் ஏற்படும். மாதாவுக்குச் சுகவீனமும் காணப்படுகிறது. ஞாயிறு, திங்கட் கிழமைகளும் செவ்வாய் காலையும் அவதானமாகக் கழிக்கப்படவேண்டிய தினங்களாகும். ஆனல் பொருள் விஷயத்தில் முன்னேற்றமுண்டு. சத்துரு ஜயமும் ஏற்படும்.

மிதுநம்: மனதில் அமைதி நிலவாது. தேகசுகமும் பாதிக்கப்படும். செவ்வாய், புதன், வியாழன் வாரங்களை அவதானமாகக் கழிக்கவும். இறுதி இரண்டு நாட்களிலும் தொழில் முன்னேற்றமுண்டு. சினேகிதர்களாலும்உதவி உண்டு.

கடகம்: நண்பர்களுடனும், உறவினருடனும் சச்சரவுகள் காணப்படுகின்றன. செலவுகள் அதிகமாகும் வாகனுதிகளால் கஷ்டமேற்படும். தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. ஆனல் வியாழன் பிற்பகலையும், வெள்ளி, சனி வாரங்களையும் அவதானமாகக் கழிக்கவும்.

சிங்கம்: தேக சுகவீனம் ஏற்படும். மனதில் அமைதி நிலவாது. ஆனல் தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. இளைய சகோதரரால் நன்மையுண்டு. சனி பிற்பகலை அவதானமாகக் கழிக்கவும்.

கன்னி; கடுஞ்சுரம், பிணி கண்டு மாறும். மனதிற் பலவிதஆலோசனை, மறதி ஏற்படும். உறவிருடன் சச்சரவுகளும் ஏற்படலாம். புது விஷயங்களில் தாமத மேற்பட்டாலும் வெற்றியுண்டு.

துலாம்: தேகசுகம் தொடர்ந்து பாதிக்கப்படும். சச்சரவுகளும் ஏற்படும். சிறு விபத்துக்கள்ஏற்படலாம். கோட்சொல்லுபவர்களால் குடும்பத்தில் கஷ்டமேற்படலாம்.

விருச்சிகம்: முன் முதலீடு செய்தவற்றில் லாபமுண்டு. பூமிப்பிரயோசன பலனுண்டு. ஆனல் செலவினங்களும் அதிகமாகவே இருக்கும் கண்களில் சுகவீனம் ஏற்படலாம்.

தனு: நண்பர்கள் மூலமாக பலவித உதவிஉண்டு குறைந்தபிரயாசத்துடன் அதிகலாபமுண்டு. ஆனல் தேகசுகம் பாதிக்கப்படும். குடும்பச்சச்சரவுகள்காணப்படுகின்றன.

மகரம்: தொழில் விஷயத்தில் முன்னேற்ற முண்டு சில தடைகள் முதலில் ஏற்பட்டாலும் கருமங்களில் முடிவில் வெற்றியுண்டு. கீர்த்தியும் மரியாதையும் ஏற்படும் ஆனல் பொதுவாக மனதில் அமைதிநிலவாது.

கும்பம்: எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற முடியும். குடும்பச் சூழ்நிலையிலும் அபிவிருத்தியுண்டு ஆனல் செலவினங்களும் அதிகமாகும். தேகசுகவீனமும் உண்டு.

மீனம்: தேகத்தில் உஷ்ணசம்பந்தமான ரோகங்கள் ஏற்படும். கோட்சொல்லுபவர்களால் குடும்பக்கலகம் ஏற்படும். ஆனல் தொழில் விஷயத்தில் முன்னேற்ற முண்டு.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினுல் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினுல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.




# கண்டதும்... கேட்டதும்...

## நாடகக்கலை வளருமா?

இலங்கையில் நாடகக் கலையை வளர்த்து விருத்தி செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றனவாம். இம் முயற்சிகளின் பயனுகத் தான்போலும் சமீப காலத்தில் நாடக மன்றங்களும் அவற்றின் நாடகங்களும் நாட்டில் அதிகரித்திருக்கின்றன. தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரை அவை கணிசமான அளவு முன்னேற்ற மடைந்திருக்கின்றனவெனலாம். இன்று சினிமா என வழங்கும் திரைப்படக் காட்சியில் நாம் பார்ப்பது நாடகமேயன்றி வேறல்ல. நாடகக் கலை பரிணும வளர்ச்சியடைந்து சினிமாவாக மாறியிருக்கிறது, மயிர்க்கொட்டிப் புழுவின் பரிணும வளர்ச்சி வண்ணுத்திப் பூச்சியில்முடிவதைப்போல. ஆகவே நாடகக் கலைக்கு புத்துயிர் அளிக்கவேண்டுமென்ருே அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ருே சொல்வதில் அர்த்தமில்லை. நாடகக்கலை, சினிமாவில் இரண்டறக் கலந்துவிட்டதால் இனி நாம் சினிமாக்கலையை வளர்க்க வேண்டுமே தவிர நாடகக் கலையை அல்ல.

## அன்றும் இன்றும்!

சினிமா இருக்கும்போது நாடகக்கலையை வளர்க்கவேண்டுமென்பது சாக்ளெட் கிடைக்கக்கூடியதாயிருக்கையில் உள்நாட்டு உற்பத்திப்பண்டமான பனுட்டை ஆதரிக்க வேண்டுமென்பதை ஒக்கும். நல்ல வெள்ளைச் சீனி தாராளமாக கிடைக்குமாயின் கோப்பிக்கு யாராவது பனங்கட்டியை நாடுவார்களா? சினிமாவில் இரண்டு அல்லது இரண்டரை மணிநேரத்தில் ஒரு நல்ல நாடகத்தை இயற்கைச் சூழ்நிலைகளில் பார்க்கக் கூடியதாயிருக்கையில் மேடையில் இரவு 9மணி முதல் காலை 4 மணி வரை காக்காய்ப்பொன் நகைகளையும் "காட்போட்" மிருகங்களையும் வைத்துக்கொண்டு நடிக்கும் நாடகங்களை யார் பார்க்கப் போகிருர்கள்! அந்தக்காலத்தில் நாடகம் சிறந்ததோர் பொழுது போக்காகஇருந்தது. அப்படியிருந்தும் நாடகம் பார்ப்பதும் நாடகத்தில் நடிப்பதும் செய்யத்தகாத காரியங்களாக கருதப் பட்டன. ''கூத்தாடுவதும் குண்டி நெளிப்பதும் ஆத்தாதவன் செய்யும் தொழில்'' என்ற பழமொழி ஒன்றே போதாதா கூத்தின் பெருமையைப் பறைசாற்றுதற்கு. அக்காலத்தில் பெண்கள் கூத்துக் கொட்டகைப் பக்கம் தலை காட்டவே மாட்டார்கள். இன்றைய சினிமாக் கொட்டகைகளிலே ''மெஜோரிட்டி'' ரசிகர்கள் பெண்களே. இன்று நாடகக் கலைக்கு இருக்கும் மதிப்பு அன்று இருந்திருக்குமேயாஞல் ''ஹோலிவூட்'' தமிழ் நாட்டுச் சினிமாத் தொழிலிடம் பிச்சை வாங்கவேண்டும்.

## தரக்குறைவின் காரணம்:

தமிழ் நாட்டில் எப்படி தமிழ்மொழி வளர்ந்து வளம் பெறுகின்றதோ அதே போல் பரத நாட்டியம், கர்னுடக சங்கீதம், தமிழ் நாடகக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலிய லலித கலைகள் அங்கே செவ்விய முறையில் வளர்க்கப்படுகின்றன; வளர்கின்றன. தங்களுடைய பொழுது போக்குக்கு வட இந்திய ஹிந்தி படங்களையும் இதர மொழிப் படங்களையும் நம்பியிருந்த சிங்களச் சகோதரர்கள் சமீபகாலத்தில் தமது சுயமொழிப் படத்தைத் தயாரித்துப் பார்த்தார்கள், அவற்றின் தரம் திருப்தியளிக்கவில்லை. அப்படங்களில் பெரும்பாலானவை பாரத நாட்டில் தயாரிக்கப்பட்டபடியால் அப்படங்களின் தரக்குறைவுக்குக் காரணம் நடிகர்களும் அவர்களின் நடிப்பும்தான் என்பது புலனுயிற்று. ஆகவே அரசாங்கம் நாடகக் கலையையும் ஏனைய கலையையும் வளர்ப்பதற்கு கலாசார திணைக்களம் என ஒரு டிப்பாட்மெண்டையும் சிருஷ்டித்திருக்கிறது.

இந்த டிப்பார்ட்மெண்டின் நிதிஉதவியைப் பெற்று சிலர் நாடக மன்றங்கள் அமைத்து நாடகங்களைப் பழகி நடத்திவருகிருர்கள். இதனுல் சிங்கள நாடகக் கலை வளர்ந்தாலும் வளரலாம். தமிழ் நாடகக்கலை வளரவே வளராதென்பது திண்ணம்.

## வடிகட்டின முட்டாள்தனம்.

இலங்கையில் நாடகக் கலையோ ஏனைய லலித கலைகளோ வளரவேண்டுமானல் முதலில் ஒருகலைக்கல்லூரி நிறுவப்பட வேண்டும். அத்தகைய ஒரு கல்லூரி நிறுவப்பட்டு அக்கல்லூரியில் பயிலுவோர் வயிற்றை வளர்க்க வகை தொரியாது கஷ்டப் படமாட்டார்களென்று உறுதியளிக்கவும் படின் ஈழநாட்டில் அக்கலைகள் முன்னேற்றங்காண முடியும். அஃதன்றி அமெச்சூர் நாடகமன்றங்கள் நாடகத்தை வளர்க்க முயலுவதும் அவை நாடகக்கலையை வளர்க்கமுடியுமென்று நம்புவதும் வடிகட்டின முட்டாள்தனமாகும்.

நாடகக்கலையை சினிமாக்கலையிலிருந்து பிரிக்கவே முடியாது. அது சினிமாவிலிருந்து பிரிந்து தனித்தியங்க வேண்டுமானல் நாடகாசிரியர்களும் நடிகர்களும் பூமிக்குப் பாரமாயிருக்க சினிமாஸ்டார்கள் ராக்கெட்டுகளில் வான வெளிப்பிரயாணம் செய்வார்கள்.

—"மாயாவி"

# இந்த 1961-ம் ஆண்டிலும் நிலத்திலிருந்து படிக்கிருர்கள்!

சின்னக் கிண்ணியாப் பாடசாலையில் பல நூற்றுக்கணக்கான பிள்ளைகள் படிக்கிருர்கள். அவ்வளவு பிள்ளைகளையும் ஆகப் பன்னிரண்டு ஆசிரியர்கள் வைத்துக்கொண்டு திணறுகிருர்கள். பெருந்தொகையான பெண்பிள்ளைகள் படிக்கும் இப்பாடசாலையில் தையல் வீட்டுப் பணி முதலிய பாடங்களை சரிவரப் பயிற்றுவதற்கு இன்னும் பெண் ஆசிரியைகளை உடனடியாக நியமிக்கவேண்டுமென்பது பொதுமக்களின் அபிலாசையாகும்.

இதே போன்று பெரிய கிண்ணியா அரசினர் முஸ்லிம் ஆண்பாடசாலையின் நிலையும் மிக மோசமாக உள்ளது. போதிய இடவசதியும், தளபாடங்களும் இல்லாததால், மாணவர்கள் வெளியிலும், நிலத்திலும் இருந்து படிக்க வேண்டியிருக்கிறதாம்!




## தமிழ் வாணன் புழுகு!

யாழ்ப்பாணத்தில்புலிப்பாணியின்பொதுப்பணி என்ற தலைப்புடன் 12-10-61 "கல்கண்டு" பத்திரிகையில் வெளியான ஒரு செய்திகண்டு ஆச்சரியமடைந்தோம். யாழ்ப்பாணத்தில் தமிழ் வாணன் ஜன சமூக நிலையம் என்று ஒரு சமூக நிலையம் கிடையாது. அப்பேர்ப்பட்ட நிலையம் ஒன்றை காட்டிக் கொடுக்கும் துரையப்பா திறந்துவைக்கவும் இல்லை. துரையப்பாவின் தூண்போன்று விளங்கும் யாழ்நகரசபை உறுப்பினர் இராஜசூரியர் சிறப்பாகப் பேசவுமில்லை! சேதுராமலிங்கம் திருமதி சுந்தரமூர்த்தி என்று சில்லறைப் பிரமுகர்கள்கூட இருப்பதாக நாம் கேள்விப்படவில்லை. 236, ஸ்டான்லி வீதியில் வ. ச. புலிப்பாணி என்ற போலி வேடந் தாங்கும் பிரமுகர் வசிக்கவும் இல்லை.

கல்யாணப் பரிசு படத்தில் வரும் எழுத்தாளன் பைரவன் போன்று துரோகப்பாவின் துரோக செயல்களுக்கு தூண்டாமணி விளக்குப்போன்று போலிப் பிரமுகர்களான புலிப்பாணிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்! இவர்கள் தவறை உணர்ந்து திருந்தும் நாள் எந்நாளோ! இல்லாத பொல்லாத செய்திகளை ஆராய்ந்து அறியாமல் கல்கண்டு பத்திரிகையில் வெளியாக்குவதன் மூலம் தமிழ்வாணன் தனது தனி மதிப்பை இழக்க நேரிடுவது குறித்து 1வருந்துகிறோம்.

07, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

க. குணம்
அ. ஜெயம்
க. அபிமன்னியு

## சாபத் தீட்டு!

3-10-61 'வீரகேசரி' யில் 'முயற்சி பலித்தது' என்ற தலைப்பின் கீழ் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த 34 பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களுக்கு நியமனம் கொடுப்பதற்காக தகவல்களை கல்வி இலாகா கோரி இருக்கிறதெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.... தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில் உளப்பண் பாட்டிலோ அல்லது பொருளாதார வளத்திலோ எல்லோரும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களென்று கூறப்படும் தமிழாசிரியர்கள் பொருளாதாரதரத்திலோ அல்லது அறிவு வளர்ச்சியிலோ முன்னேறிவிட்டார்களென்று கருதுவதற்கிடமில்லை.

ஒரேதராதரம், ஒரேவாழ்க்கைநிலை, ஒரேபண்பாடு, உள்ள ஆசிரிய சமூகத்தை சிறுபான்மை பெரும்பான்மை என்று பிளவு படுத்தி முத்திரை குத்தி நியமனங்கொடுக்க முனைவது ஏனோ? கற்றவர்கள் சமூகத்தில் சாதிப்பாகுபாட்டைப் புகுத்த முனைவது எதிர்காலச் சமுதாயத்துக்கு ஒரு சாபத்தீடாகவே முடியும். சாதி அடிப்படையில், இனமத அடிப்படையில் நியமனம் வழங்குவது தனிமனிதன் உரிமையை உதாசீனம் செய்வதுடன் சிறந்த வல்லுநர்களை ஆக்கவும் முடியாமல் போய்விடும். 34 சிறுபான்மைச் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு நியமனம் கோரும் (சிறுபான்மை தமிழர்) மகாசபை வேலையற்றிருக்கும் அத்தனை தமிழாசிரியர்களுக்கும் தங்கள்செல்வாக்கை உபயோகித்து நியமனங் கோரியிருந்தால் நன்றியுடையவர்களாயிருப்போம்.

ப. வே. இ. இ. ஆசிரியசங்கம்
140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம், 10-10-61

செல்வி த. சரஸ்வதிப்பிள்ளை (தலைவர்)
நா. க. கணபதிப்பிள்ளை (காரியதரிசி)

## பாரபட்சம்.

1-10-61 'புதினம்' பத்திரிகையில் வேலையற்ற தமிழாசிரியர்களின், நிலையை விபரத்துடன் எடுத்து விளக்கி அவர்கள் விடயத்தில் அக்கறை காட்டும் உங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். ........ சோஷலிசத்தை அடிப்படையாக கொண்டு ஆட்சிபுரியும் அரசாங்கம் ஏன் நியமனங்களில் பாரபட்சம் காட்டுகிறது? இலங்கை மக்களில் மூன்று பெரும் சமூகங்களான சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் இருக்கின்றனர். ஆனால் 1956 ல் இருந்து சிங்கள, முஸ்லீம் என்னும் இரு சமூகங்களும்தான் அரசாங்கத்தைச் சாதகமாக்கிக்கொள்ளுகின்றன. தமிழர்கள் பல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

அக்கரைப்பற்று 7 — க. ஆறுமுகம்

## திருமணம் வேண்டாம்!

ஆரியர் தங்கள் வருவாய்க்காக சில கட்டுப்பாடுகளை உண்டாக்கினர் என்ற நியதி சைவமக்களிடை உருவெடுத்து வருகின்றது. இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றிய பின் ஒருவாறாக ஈழத்தில் தடைப்பட்டு விட்டது. 29—9—61 'ஈழநாடு' பத்திரிகையில் ஸ்ரீகுமாரசுவாமிக் குருக்களின் அறிக்கையை—"திருமணம் என்னும் சொல் கடவுளுடைய மணத்துக்கேயுரியது. மனுஷர்களுக்கு நடத்தப்படும் மணம் விவாகசோபனம் என வழங்கியிருக்கிறார்கள். ஆகவே கோவில்களில் விவாகம் நடைபெறலாம்"—என்பதை வாசித்தபின் அந்நோய் ஈழத்திலும் பரவ குருக்கள் ஐயா வித்திட்டு விட்டார் போல காண்கிறேன்.

திருமணம் என்பது மக்களுக்குரிய விவாகம் என்றும், திருக்கல்யாணம் என்பது இறைவனுக்கு நடாத்தப்படும் கோவிற் திருமணவிழா வென்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் கண்டு தெளியலாம்.

குருக்கள் இன்னும் கூறியதாவது; "விவாகச் சடங்குகள் ஆலயங்களில் நடைபெறுவதால் ஆலயத்துக்கு ஏதேனும் அநாச்சாரம் உண்டாகப்போவதில்லை"—இவற்றிற்குப் பரிகாரம் பிரபந்தத்திரட்டு ஒன்பதாவது அத்தியாயத்தில் காணப்படுகின்றதே! குருக்கள் ஐயா எழுதிய "மகோற்சவ விளக்கம்" என்னும் நூலில் மறைந்து இருக்கின்றது! குருக்கள் ஐயா பொன்னுடை போர்த்துக் கௌர

[10-ம் பக்கம் பார்க்க]

## கறுப்பும் வெள்ளையும் காதலிக்க கூடாது!

தென்னாபிரிக்காவின் பிரபல நாட்டிய நடிகையான டொட்டீ டியோவுக்கும், முன்னாள் ராணுவ வீரரான பெவில் ஜோண்ரட் என்பவருக்கும் ஆறு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கட்டித் தழுவி முத்தமிட்டுப் பிரிந்த அந்த அழகி, "நாங்கள் செய்த குற்றம் வேறொன்றுமில்லை. காதலித்து நேசமாயிருந்தோம்.—அதுவே நாங்கள் செய்த குற்றம்!" என்று பத்திரிகையாளரிடம் பரிதாபமாகக் கூறினார்.

தென்னாபிரிக்க அரசாங்கச் சட்டப்படி கறுப்பரோடு வெள்ளையர் கலப்புமணம் செய்வதும், காதல் புரிவதும் கூடக் கடுமையான குற்றமாகும்! முன் குறிப்பிட்ட நாட்டிய நடிகை தென்னாபிரிக்காவின் கவர்ச்சிமிக்க ஒரு கறுப்பழகி; அவளுடைய காதலன் வெள்ளை நிறத்தவர்.




- உலகமென்ற குழந்தையின் தலைக்கு மேலே 'டமார்!' என்று ஒரு நாள் அணுக்குண்டுகள் வெடிக்குமானால்.........
- அடுத்த பலகோடி வருடங்களுக்கு இந்த உலகத்தில் புல் பூண்டுகள் கூட முளைக்காது.........
- இந்த அணுக்குண்டு யுத்தம் வருமா? இவை வெடித்தால் ஏற்படக்கூடிய பயங்கர நிலை என்ன?
- அந்தப் பயங்கர நிலை ஏற்படாமல் தடுக்கும் முயற்சிகள் என்ன?

— இவை பற்றிய விபரங்களை இந்த இதழின் நடுப்பக்கத்தில் 'கலா' எழுதியுள்ள விபரமான விளக்கக் கட்டுரையில் படித்தறியுங்கள்.

பல்சுவைப் புதினம்

'ரமணன்'

# சேச்சிலிலும் வயது குறைந்த சிறிய தந்தை—பல்பிடுங்க ஐம்பது ரூபா!—'ஷா'வின் நாடகம்

லண்டனின் மாஜிப்பிரதமர் சேர். வின்ஸ்டன் சேச்சில் உலகிற்கு எவ்வளவு பிரபல்யமாக விளங்குகின்றாரோ, அதேபோல் பிரபல்யமானது அவரது வாழ்க்கையும். ஏன் அவரது சந்ததியினரது வாழ்க்கை கூட அப்படித்தான் விளங்குகின்றது.

இல்லைப் பாருங்கள், இன்று வின்ஸ்டன் சேச்சில் ஒரு பேச்சுக்கு அதாவது மூன்று மணி நேரம் பேசுவதற்கு பத்தாயிரம் பவுண் வாங்குகின்றார். எமது பணத்தின்படி பார்த்தால் ஒரு லட்சரூபாவிலும் பார்க்க அதிகம். சேச்சிலின் பேச்சு அவ்வளவு சிறந்ததாம்! அவர் பேச்சு ஏதோ கேட்டுவிட்டுப் போவதுடன் போவதில்லை! அதை 'ரெக்காட்' பண்ணி ஒரு 'ரெக்காட்' 3 பவுண் 4 பவுண் என்று விற்கிறார்கள்.

இதே சேச்சில் முதல் முதல் மேடையில் ஏறிய போது என்ன பேசினார் தெரியுமா? மூன்றே மூன்று சொற்கள்தான்! அதுவும் பேசுவதற்கு 15 நிமிடங்கள் சென்றன!

1896-ம் ஆண்டுசேச்சில் ஓர் சாதாரண அபேட்சகராக தனது தொகுதியில் போட்டியிட்டார். பிரசாரக் கூட்டத்தில் அவர்பேசவேண்டும்! மேடையிலே பேசுவதற்கோ ஒரே நடுக்கம்! என்னசெய்வது பேசாமல் விட முடியுமா? எவ்வளவோ துணிபுடன் மேடையிலேறினார்.

''தலைவர் அவர்களே!'' முதல் சொல் வெளியேறிவிட்டது. ஆனால் அந்தப் பாழாய்ப்போன பயம் சும்மாவிட்டால்தானே? கால்கள் நடுங்கின! கூட்டத்தில் 'கசமுசா'வென ஒரே பேச்சு! ஐந்து நிமிடங்கள் ஓடியது. ''நண்பர்களே'' மீண்டும் ஓர் சொல்! விநாடிகளை தொடர்ந்து நிமிடங்கள் ஓடின! 'மற்றும்' அப்பாடி! மொத்தமாக மூன்று சொற்கள் பேசிவிட்டார்! அவ்வளவுதான்! அதன் பின்னர் அவரால் ஒருசொல் கூட கூற முடியவில்லை. பதினைந்து நிமிடங்களில் மூன்று சொற்களை உதிர்த்துவிட்டு அமர்ந்துவிட்டார்! ஆனால் கூட்டத்திலே எழுந்த சிரிப்பொலி அடங்க மீண்டும் பதினைந்து நிமிடங்கள் சென்றனவாம்!

சேச்சிலின் தாய் தனது அறுபதாவது வயதிலே மறுமணம் செய்துகொண்டாள். சரி! மாப்பிள்ளையின் வயது என்ன தெரியுமா? சேர்ச்சிலிலும் பார்க்க அவரது தாயின் கணவனுக்கு அதாவது புதுமாப்பிள்ளைக்கு, நாலு வயது குறைய! சர்ச்சில்தான் அந்தத் திருமணத்திற்குப் பதிவுக் கந்தோரில் முதல் சாட்சியாக கையெழுத்திட்டவர்!

சேச்சிலின் தாயார் செத்துவிட்டார். பலபல பிரமுகர்கள் எல்லாம் வந்து சேச்சிலுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் சேச்சில் என்ன செய்தார் தெரியுமா? தேற்றுவார் அற்று அழுது கொண்டிருக்கும் தனக்கு தம்பி போன்ற தன்னிலும் பார்க்க வயது குறைந்த தன் சிறிய தந்தைக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாராம்!

* *

ஓர் தந்தை பல்லுப்பிடுங்குவதற்காக தன் மகனை டாக்டரிடம் அழைத்துக் கொண்டு சென்றார். பல்லுப் பிடுங்கியபின்னர் டாக்டரின் வாய் பணத்தை கேட்டது.

டாக்டர்:—இப்பல்லுப் பிடுங்கியதற்கு ஐம்பது ரூபா தரவேண்டும்!

தகப்பன்:—என்ன கொடுமை! ஒரு பல்லு பிடுங்க பத்து ரூபா தானே எல்லோரும் வாங்குகிறார்கள்?

டாக்டர்:—ஆமாம்! ஒரு பல்லு பிடுங்க பத்து ரூபா தான்! ஆனால் உங்களது மகன் பயங்கரச் சத்தம் வைத்து இங்கிருந்த நாலு பேரை பயந்து ஓடச் செய்து விட்டான்! ஆகவே அந்த நாலுபேரது பணத்தையும் சேர்த்து நீங்கள் ஐம்பது ரூபா தரவேண்டும்!

* *

பேர்னட்ஷாவின் நாடகங்களுக்கு எப்பொழுதும் சரியான கிராக்கி! மக்கள் எந்த நிலைமையிலிருந்தாலும் அவரது நாடகத்தை பார்க்கத் தவறமாட்டார்கள். அதனாலே எப்பொழுதும் தியேட்டர் 'புல்'லாகத்தானும் இருக்கும்.

ஆனால் அன்று தியேட்டரில் ஒரு பெண்மணிக்கருகில் 'ரிசேவ்' செய்யப்பட்ட கதிரை ஒன்று சும்மாகக் கிடந்தது. எத்தனையோ மாதங்களுக்கு முன்னர் டிக்கட் விற்கப்பட்ட 'மைபர்லேடி' என்ற அவ்விசை நாடகத்திலே ஒரு 'சீற்' காலியாக இருந்ததை கண்ட நிர்வாகி ஒருவருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை! அவர் ஓடிப்போய் கேட்டார்:-

''யார் இந்த ஸீற்றை 'றிசேவ்' பண்ணியது?''

''நான் தான்'' பக்கத்திலிருந்த பெண்மணி பதிலளித்தாள்.

''ஏனம்மா உங்கள் கணவரை கூட்டி வந்திருக்கலாமே?''

''அவர் இறந்து விட்டார்'' அப்பெண்மணியின் குரலிலே சாடையான துக்கம்—தியேட்டர் நிர்வாகிக்கு ஏன் இக்கேள்வியை கேட்டோமென்றிருந்தது. இறந்த கணவனைப் பற்றிக் கேட்டு ஒரு மனைவியின் மனதை புண்படுத்துவது பாபம் தானே? பின்னர் ஏதோ முகஸ்துதிக்காக அவரது வாய் கேட்டதாம்,

''ஏன் அம்மா நீங்கள் ஓர் நண்பரை அழைத்து வந்திருக்கலாமே?''

அப்பெண்மணி பதிலளித்தாள். ''முதலில் அப்படித்தான் செய்ய இருந்தேன். ஆனால் வேறு ஒருவரும் இல்லாததால் என் நண்பர் கணவனின் பிரேதத்தை அடக்கம் செய்ய சென்றுவிட்டார்.'' ●

அதிசயம்! ஆச்சரியம்!

# விரல் நுனியில் விசித்திரம்!

## கைராசி கொண்ட கன்னி ஒருத்தியின் கதை!

சில பெண்கள் அதிகம் அலட்டிக்கொள்ளாமல் சமையல் செய்தாலும் கூடச் சாப்பாடு நேர்த்தியாக அமைந்து விடுகிறது. மற்றும் பெண்மணிகள் அனைத்தையும் அளவோடு போட்டு நல்லபடி பக்குவமாய் சமையல் செய்தாலுங் கூட, அந்தச் சமையல் ருசிப்பதில்லை. இதன் காரணம் என்ன?—நம் நாட்டு பெண்மணிகளைக் கேட்டால் கைமணம்தான் காரணம் என்பார்கள். அதாவது, சாப்பாட்டை மணமும் ருசியும் உடையதாக்கும் ஏதோ ஒன்று பிந்தியவர்க்கத்தாரிடம் கிடையாதாம்!

### புத்துயிரளிக்கும் தெய்வீகக் கைராசி!

இது எவ்வளவு தூரத்துக்கு உண்மையோ, பக்நாட் என்னும் பாரிஸ் கன்னி ஒருத்தி கைராசி நிரம்பப் பெற்றவளாக இருந்தாள் என்கிறவரையில் சந்தேகமேயில்லை! கைராசியிலும் சமையலை மணக்க வைக்கும் சாதாரண ரகமல்ல, தொட்டதற்கெல்லாம் புத்துயிரளிக்கும்தெய்வீகக் கைராசி! அதுவும், பிறந்தது முதல் அவளோடு வளர்ந்துவிடவில்லை. இடையில் திடீரென்று ஒரு நாள் அவளிடம் குடிகொண்டதுதான்.

### அன்று நடந்த அதிசய சம்பவம்!

அன்று, வாடி வதங்கிப் போன மலர்களை வெளியே கொண்டுபோய் கொட்டுவதற்காக அலங்கார ஜாடியிலிருந்து அவள் எடுத்தாள். அந்தச் சமயத்தில் 'டெலிபோன்' மணி அலறவே யார் என்று கேட்பதற்காக அந்த மலர்களை அருகேயிருந்த மேசைமீது வைத்துவிட்டுச் சென்றாள். அப்புறம் அவளுக்கு அதுபற்றிய ஞாபகமே வரவில்லை! இரண்டு மணி நேரம் கழித்துத்தான் ஞாபகம் வந்தது. தூக்கி எறிவதற்கென்று அவள் திரும்பி வந்தபோது—என்ன ஆச்சரியம்! அப்போதுதான் செடியிலிருந்து பறிக்கப்பட்டவை போல் அத்தனை மலர்களும் மலர்ந்திருந்தன! ஒன்றில் கூடச் சற்றும் வாட்டமேயில்லை! அதைக் கண்டு திகைத்துப்போன அவள் வேறு யாரோ வாடிய புஷ்பங்களைக் கொட்டிவிட்டுப் புதுப் பூக்களைக் கொய்து வந்து வைத்திருக்கலாமென்று நினைத்து அவற்றைக் கண்ணாடி ஜாடியில் பொருத்தினாள். சாதாரண மலர்களாயிருந்தால் அவை இரண்டொருநாளில் வாடியிருக்கவேண்டுமல்லவா? ஆனால், அவ்வாறு இரண்டுநாள்மட்டுமல்ல, இரண்டுவாரங் கழித்துக் கூட அவை சிறிதும் வாடவேயில்லை! இதனால் தன்னுள் பேயோ பிசாசோ புகுந்திருக்கிறதெனப் பயந்துபோன அவளை மேலும் மருளவைக்கும் மற்றொரு சம்பவம் விரைவில் நிகழ்ந்தது.

### கெட்டுப் போகாத விந்தை மீன்!

நறுக்கிச் சமையல் செய்வதற்காக குளிர்சாதனப் பெட்டியிலிருந்து சில மீன்களை எடுத்து வெளியே வைத்தாள் அந்த பாரிஸ்மாது. அன்றும் 'டெலிபோன்' மணி அலறவே அந்த மீன்களை அப்படியே போட்டுவிட்டுப் போய்விட்டாள். யாரோ உறவினர் சாகக்கிடந்ததால் தான் 'டெலிபோன்' மணி அலறியது. எனவே, அவரைப்பார்ப்பதற்குஅவசர அவசரமாக புறப்பட்டாள். அந்த அவசரத்தில் மீன்களை எடுத்து வைக்க மறந்துவிட்டாள். அந்த உறவினர் இறந்துவிட்டதால் மூன்று தினங்கள் கழித்துத் தான் அவளால் வீடுதிரும்ப முடிந்தது. அப்போது அவளுக்கு முதலில் எதிர்ப்பட்டவை அந்த மீன்கள்தான். சாதாரணமாக அதற்குள் அவை அழுகிக் கெட்டுப்போயிருக்கவேண்டும். ஆனால், அவையோ அப்போதுதான் பிடிக்கப்பட்டவை போன்று சற்றும் கெடாமலிருந்தன!

### விரல் நுனியில் விசித்திர சக்தி!

இதனால், முன்னிலும் பயந்து விட்ட அவள் அலறியடித்துக்கொண்டு டாக்டரைப் போய்ப்பார்த்து, நடந்தவற்றைச் சொன்னாள். அவளுடைய விசித்திர அனுபவங்களைக் கேட்ட அவரும் அவளைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தினார். அவற்றின் பயனாக, அவள் தொட்டவையெல்லாம் புத்துயிர் பெறுவதை அவரும் கண்டார். அவளைப் போல அவரும் மலைத்தவராய் பல நிபுணர்களைக் கலந்தாலோசித்தார். எல்லோரும் சேர்ந்து கண்ட முடிவு என்ன தெரியுமா? அவளுடைய விரல்களின் நுனியில் ஏதோ மர்மமான கதிரியக்கம் இருக்கிறது என்பது தான்! அதுதான் அவள் தொட்டவற்றுக்கெல்லாம் துடிப்பூட்டுகிறது என்று விஞ்ஞான பூர்வமாக விளக்கமும் கூறினர். ஆனால், எப்படி அந்த அபூர்வசக்தி அவளுக்கு ஏற்பட்டதென்பதை மட்டும் என்னமுயன்றாலும் அவர்களால் கண்டு பிடிக்கவே முடியவில்லை! ○

# "நடுங்கி நடுங்கி நடித்தேன்! நடிப்பா அது?"

## நடிகர் நம்பியாரின் முதுகு பழுத்த கதை!

கட்டான உடல்—சினிமாவுக்கேற்ற முகம்—அத்துடன் நடிப்புத்திறமையும் இருந்து விட்டால்......? ஆம்! நடிகர் எம். என் நம்பியாருக்கு இத்தனையும் உண்டு. நகைச் சுவை நடிகராக நுழைந்து, பின்பு கதாநாயகனுகி, இப்போது வில்லாதிவில்லனுகிவிட்டார் அவர்! தன் "முதுகு பழுத்தகதை"யை இங்கே கூறுகிறுர்—படித்து ரசிக்கலாமே!

எனக்கு அப்போது வயது ஒன்பது இருக்குமென்று நினைக்கின்றேன். நாடகம் என்ருல் ஒரேஉயிர்—ஒரேபைத்தியம்! ஆனுல்என்எண்ணத்துக்குஎதிர்மாருனவர்கள்என்பெற்ருேர். அவர்களுக்கு நாடகம் சினிமா என்ருல் பிடிக்கவே பிடிக்காது. ஆக, அவர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக நாடகம் பார்த்துவிட்டு வருவேன். பிறகு நாடகத்தில் நடித்தவர்களைப்போல் நானும் என் நண்பர்கள் மத்தியில் நடித்துக்காட்டுவேன். எல்லோரும் என் நடிப்பைக் கண்டு வியந்து பாராட்டுவார்கள். ஆனுல் வீட்டில் மட்டும் என் நடிப்பெல்லாம் செல்லாது. என்னை அடிக்கடி எங்கும் போகக் கூடாது என்று கட்டளைக்குமேல் கட்டளை! அப்படி ஒருமுறை கடுமையான உத்தரவு போட்டிருந்தசமயம் எங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள குருவாயூருக்கு ஒரு நாடகக் கோஷ்டிவந்தது. அந்த நாடகக் கோஷ்டியில் "பிரண்ட்" ராமசாமியும் இருந்தார். அவருடைய நடிப்பைப் பற்றி ஊரெல்லாம் ஒரே புகழ்ச்சிதான். இதைக் கேட்ட என் மனம் துடியாய்த் துடித்தது. ஆனுல்...? என் அப்பாவின் கட்டுப்பாடு என்னைப் பயமுறுத்தியது! எனினும்...? என் கட்டுக்கடங்காத ஆசை, கட்டுப்பாட்டைமீறி நாடகத்துக்கு செல்லத்தூண்டியது. ஆகவே துணிந்து புறப்பட்டேன்! குஷியாக நாடகம் பார்த்துவிட்டு வீடுதிரும்பினேன்.

அப்பொழுது இரவு சுமார் ஒரு மணியிருக்கும். 'நைஸாக' சுவர் ஏறிக்குதித்தேன். மெல்ல மெல்ல என் அறைக்குச் சென்று திறந்தேன். அங்கே...?

என் அப்பா நின்றுகொண்டிருந்தார், என் நெஞ்சு பகீர்என்றது. "டேய் இப்படி வாடா" என்ற குரல் கேட்டது. அவ்வளவுதான் அவர் பக்கம் போய் நின்றேன். என்னைத் தலைகுனிந்து நிற்கும்படி சொல்ல, நானும் அப்படியே செய்தேன். பிறகென்ன? தன் கைவலிக்கும் வரை அடித்தார்! இதைக்கேட்ட நித்திரை செய்து கொண்டிருந்த அம்மா ஓடிவந்து என்னைத் தூக்கிக்கொண்டார். மயக்கமாக அம்மாமீது சாய்ந்துவிட்டேன். இந்தச் சம்பவத்தின்பின் எனக்கு நாடகத்தின் நினைவே வராது என்று நினைத்துவிட்டார்கள். ஆனுல் நானே...!

மறுநாளும் பழையபடி அந்த நாடகக் கம்பெனிக்குப்போய்,நாடகம் ஆரம்பமாவதற்குமுன்பு, அதன் உரிமையாளரைச் சந்தித்து என் ஆவலை வெளியிட்டேன். உடனே அந்த நாடகக் கம்பெனியாளர், அன்றைய நாடகத்திலேயே நடிக்கச் சொன்னுர்கள். நானும் நடித்தேன்! நான் மிகவும் பயப்படுபவன் போல் நடிக்க வேண்டும். நிஜமாகப் பயப்படுபவன் போல் நடித்ததைப் பார்த்த நாடக உரிமையாளர் அசந்தே போய்விட்டார்! ஆனுல் உண்மையில்......!

நான் பயப்படுபவன் போல் கால்கள் நடுநடுங்க கைகள் பதற நடித்தது—நடிப்பல்ல! நிஜமாகவே பயந்துகொண்டே மேடையில் ஏறினேன். காரணம்—என் அப்பா மேடைக்கு முன்னுல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரைப்பார்த்துவிட்டு நான் நடுங்கியது நான் ஏற்ற பாத்திரத்துக்கு பொருந்திவிட்டது. எப்படியோ அந்தக் காட்சியை முடித்துக்கொண்டு வந்து பேசாமல் ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டேன்! ஆனுலும்......!

பயம் விட்டபாடாய் இல்லை. நாடகம் முடிவதற்குள் எங்கேயாவது போய்விடலாமென்று நினைத்தேன். ஆனுல் அப்படிச் செய்யவில்லை. நாடகம் முடிந்தது மெதுவாக "சீனுக்குப்" பின்புறமாக நின்று அப்பாவை எட்டிப்பார்த்தேன். அங்கே அவர்மட்டும்உட்கார்ந்து கொண்டிருந்தார் அனைவரும் வெளியே போனவுடன், மேடையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். உடனே நான் ஓடிப்போய் உரிமையாளர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். அங்கே வந்த என் அப்பா நாடக உரிமையாளருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு "என்மகனைப்பிரமாதமாக நடிக்க வைத்து விட்டீர்களே—நீங்களே அவனை முன்னுக்குக் கொண்டு வாருங்கள்" என்று சிரித்துக் கொண்டுடே கூறிவிட்டு வீடுதிரும்பினுர்.

நான் திரையுலகில் நுழைவதற்கு காரணமாயிருந்த நாடக உலகத்தில் எனது முதல் நாள் அது. எனவே இந்நிகழ்ச்சி என் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டது.

—பஞ்சவர்ணன்



பிரசித்திபெற்ற நடன நட்சத்திரம் கமலா லட்சுமணன் அவர்களின் தங்கை குமாரி ராதா. நடனத்தில் அக்காவுக்கு ஏற்ற தங்கை இவர்!

## கண்ணில் இடம் பெற்றவர் சிவாஜி கருத்தில் இடம் பெற்றவர் எம். ஜி. ஆர்.

'அரசியல் கட்சிகளைப் பொறுத்த மட்டில் கலைஞர்கள் விருந்தாளிகளாகத்தான் இருக்கவேண்டும். வீட்டுக்காரராக இருக்கக் கூடாது!"—தமிழ் தேசியக்கட்சி விழாவில் சிவாஜிகணேசன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தில் கலைஞர்களால்தான் குழப்பம் ஏற்பட்டது. கலைஞர்களால்தான் சிலரும் பிரிந்து சென்ருர்கள்' என்பதைத்தான் இப்படி மறைமுகமாகச் சிவாஜி கணேசன் அறிவிக்கிருர், அதுவும் குறிப்பாக புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனைத்தான் சுட்டிக் காட்டுகிருர். என்பதும் தெளிவாகப் புரிகிறது.

சிவாஜி கணேசன் நடித்து நடித்துப் பார்த்தார்! கிழவனுக நடித்தார். குமரனுக நடித்தார். —நொண்டியாக நடித்தார், ஊமையாக நடித்தார்—ராஜாவாக நடித்தார், மந்திரியாக நடித்தார்—காதல் செய்து பார்த்தார், கத்தியைத் தூக்கிப்பார்த்தார், ஆனுல் அவர் இத்தனை செய்தும் வெறும் நடிகராகத் தானிருந்தார். நாட்டுமக்களின் நல்லெண்ணத்தைப் பெறமுடியவில்லை! மக்களின் இதயத்தில் அழியாத இடத்தையும் பிடிக்க முடியவில்லை!

அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி கூறுவதுபோல் புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்மக்களின் இதயத்தில் இடம் பெற்ற ஒரு பாரி வள்ளலாகி விட்டார்!

சிவாஜி கண்ணில்இடம்பெற்ற நடிகராகஇருக்கலாம், கதுகளில் இடம் பெற்ற நடிகராக இருக்கலாம்! ஆனுல், இதயத்தில் இடம் பெற்றுவிட்ட நடிகரல்ல!

—'மாலைமணி'

### "தேன் நிலவு" ஸ்ரீதரின் அடுத்த தயாரிப்பு

இயற்கை அழகுமிளிரும் "தேன் நிலவை"த் தயாரித்து வெளியிட்டிருக்கும் 'கதாசிரியர்—டைரக்டர்' ஸ்ரீதர், ஒரு டாக்டரின் வாழ்க்கையைப் பின்னணியாகக்கொண்ட சமுகக்கதையை படமாக்கத் திட்டமிட்டுவருகிருர். இது ஒரு குறுகிய காலத் தயாரிப்பாக இருக்குமாம்.

### புதிய படங்கள் சில.

ஏ. பி. நாகராஜன்கதை வசனம், டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள டவர் பிக்சர்ஸாரின் "கற்பகம்" துரிதமாகத் தயாராகி வருகிறது. நடிகவேள் ராதா, எஸ். எஸ். ராஜேந்திரன், வி. கே. ராமசாமி, ஜோதி, ராமராவ் ஆகியோர் நடிக்கிருர்கள்.

மிஸ்ஸியம்மா, கல்யாணம் பண்ணிப்பார் போன்றபடங்களைத் தயாரித்து வெளியிட்ட விஜயா புரொடக்ஸன்ஸார், நீண்ட கால இடை வெளிக்குப் பின் தமிழ்ப்படமொன்றைத் தயாரிக்க ஏற்பாடுசெய்து வருகிருர்கள். ஜெமினி, சாவித்திரி, விஜயலட்சுமிமுதலியோர் நடிக்கிருர்கள்.

டி. ஆர். ரகுநாத் டைரக்ஷனில் 'பிலிம் கொம்ரேட்ஸ்' படநிலையத்தார் தமிழ்ப்படமொன்றைத் தயாரிக்கிருர்கள். நடிகவேள், ஆனந்தன்; ராமதாஸ், ராமராவ், புஷ்பலதா, புஷ்பமாலா ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் கதை இரு சகோதரர்களைப் பற்றியதாகும்.

ரஷ்யாவும் அமெரிக்காவும் பயங்கர அணுக்குண்டுகளைத் தயாரித்து கொண்டிருக்கின்றன. பிரிட்டன், பிர
களும் தாங்களும் இந்த நாசகாரியைத் தயாரிப்பதில் ஆர்வம் கொண்டு நிற்கின்றன. இந்நிலையில் ஏதாவ
அடுத்த யுத்தம் ஒன்று ஆரம்பமாகுமானால்......

# அந்தோ, அணுக்கு

உலகமென்ற குழந்தையின் தலைக்கு மேலே ஒரு நாள், காதுச்சவ்வுகள் வெடித்து விடுவது போல கதி கலங்கி திகைத்து விடக் கூடியதாக "டமார்.......!" எனக் குண்டு வெடிக்கப் போகிறது! அப்படி வெடித்தால்..........?

வானை முட்டும் மாடமாளிகைகள், எந்திர ஆலைகள், அழகிய சோலைகள், எழில் மிக்க நகரங்கள், கிராமங்கள் எல்லாமே அழிந்து விடும்! ஏன் உலக மனித வர்க்கமே பூண்டோடு அற்றுவிடப் போகிறது! —அடுத்த பலகோடி வருடங்களுக்கு உலக நிலப்பரப்பே பாழ்வெளியாக — பாலைவனமாக் விளங்க நேரிடலாம்! இங்கே புல் பூண்டுகள் கூட முளைக்கமாட்டாது!

தனக்கு ஏற்படப் போகிற இந்தப்பயங்கர அழிவைக் கண்டு—ஊழிகால உற்பாதத்தை உணர்ந்து உலகம் பயத்தால் கண்களைப் பிதுக்குகிறது. அகில உலக சமாதான பிரேமிகள், சாதாரண பிரஜைகள் ஆண்கள் பெண்கள் அனைவருமே 'அணுவாயுதப் பயிற்சியைத் தடை செய்—நிறுத்து' என ஏகக்குரல் விடுக்கிறார்கள்! உலகப் பிரசைகளின் இந்த அவலக் குரல்—பீதிக் கதறல் வல்ரசுகளின் காதில் விழ மறுக்கிறது!

ஏதேச்சாதிகார வெறியும், 'நான் பெரிசு; நீ பெரிசு' என்ற போட்டியும் அவர்கள் காதுகளை அடைத்துக்கொண்டுவிட்டன!

மேற்கு வல்லரசு நாடுகளும் ரஷ்யாவும் நடு நிலைமை நாடுகளின் வேண்டுகோள்களை ஏற்று பயங்கர அணு ஆயுத உற்பத்திகளை நிறுத்துவதற்கு இடக்குச் செய்கின்றன இன்று! அதனால்

உலக அழிவு எந்நேரமும் ஏற்படலாம்!—மூன்றாவது உலக யுத்தம் மூண்டால் அப்போது அந்த யுத்தம் ஆண்டுக்கணக்கில் நீடிக்க மாட்டாது. மாதக்கணக்கில் கூட தேவையில்லை. ஒரு சில தினங்களில் அகிலம் பூராவுமே கிடு கிடு என அதிர்ந்து அழிந்து விடும்! அப்படிப் பயங்கர ஆயுதங்களை இன்று அமெரிக்காவும் ரஷ்யாவும் கண்டு பிடித்துள்ளதாக தெரிவித்துள்ளன!

வல்லரசுகளின் பதவிக் கயிறிழுப்புப்போட்டியில் சிக்கிப் பரிதாபமாகத் துடிக்கும் உலகத்தின் கூக்குரலை அசட்டை செய்துகொண்டு, அணுகுண்டுகள், ஜலவாயுக் குண்டுகள், நைட்ரோன் குண்டுகள், மற்றும் அணு ஏவாயுதங்களையெல்லாம், அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா முதலிய வல்லரசுகள் தொடர்ந்து, தயாரித்து எக்காளமிட்டபடி பயிற்சி செய்கின்றன! ஒவ்வொரு குண்டுப் பரீட்சையின் போதும் உலகத்தின் உயிர் ஊசலாடுகிறதே—உலகத்தின் கோடானுகோடி மக்களின் உயிர்களும் இன்று அமெரிக்கா, ரஷ்ய வல்லரசுகளின் 'சின்னத்தனமான' அநாகரீகமான, மிலேச்சத்தனமான, மிருக வெறி பிடித்த, வெடிகுண்டு விளையாட்டில் பகடைக் காய்களாக, பலிக்கடாக்களாக உருட்டப்படுகிறன!

சர்வதேசக் கூக்குரலுக்கு மதிப்பளிப்பதுபோல அமெரிக்காவும் ரஷ்யாவும் 1959ல் அணு ஆயுத உற்பத்திகளை நிறுத்தி வைத்திருந்தன. திடீரென சென்ற மாதம் முதல் இரண்டுநாடுகளும் மீண்டும் பலப்பரீட்சையில் குதித்துவிட்டன! மனிதவர்க்கத்தின் குரல் வெறும் காட்டுக் கூச்சலாக மதிக்கப்பட்டுவிட்டது!

இன்று அமெரிக்க—ரஷ்ய நாடுகளிடமும் மற்றும் வல்லரசுகளிடமும் பல பயங்கர குண்டுகள் இருக்கின்றன. இந்த இராட்சச குண்டுகள் வெடிக்கப்படும்போது ஏற்படும் விளைவுகள் மிகக் கொடூரமானவையென்பதில் சந்தேகமில்லை.

மேற்கு வல்லரசுகளிடமும் ரஷ்யாவிடமுமுள்ள இராட்சச குண்டுகளின் 'சாம்பிள்கள்' இதோ!

**அணுக்குண்டு:** இரண்டாவது மகா யுத்தத்தின்போது 1945ல் ஹிரோஷிமா நகரை நிர்மூலமாக்கி, ஹிட்லரைப் பணியவைத்த பயங்கர வெடிகுண்டு புளூட்டோனியம் அல்லது யுரேனியம் வெடிமருந்துகளை நிறைத்து உள்ளே நிறைக்கப்பட்டிருக்கும்; வெடிக்கும்போது "டமார்" என அதிர வைப்பதோடு, மிகவும் கொடூரமான சூட்டையும், அதிர்ச்சியையும் உண்டாக்கவல்லது. இந்தக் குண்டு வெடிக்கும் அதிர்ச்சியால் அல்லது உஷ்ணத்தால் அல்லது குண்டு வெடித்துப் பரவும் அணுக்கதிர்களால் மக்கள் பொலபொல என இறந்துவிடுவர்! கட்டிடங்கள் தரைமட்டமாகும்!

**ஜலவாயுக் குண்டு:** இந்தக் குண்டு ஏற்படுத்தும் சத்தமும் தாக்குதலும் பலமடங்கு அணுகுண்டைக் காட்டிலும் அதிகம். ஒரு அணுகுண்டை ஜலக் குண்டின் டின் திரி என்றுதான் கூறலாம். ஜலவாயுக் குண்டில் வாசல் திரியாக பொருத்தப்பட்டிருக்கிற அணுக்குண்டு வெடித்ததும் குண்டின் உள்ளே அமுக்கி வைக்கப்பட்டிருக்கிற நச்சு ஜலவாயு குபு குபு என வெளியேறி வான வெளிப் பிரதேசமெங்கணும் பரவி விடுகிறது! இதிலிருந்து ஏற்படுகிற அனலும் அதிர்ச்சியும் அணுக்குண்டிலும் பார்க்க அதிக மடங்கானவை. அதனால் அழிவும் பலமடங்கு அதிகமாக ஏற்படும்!

**நியூட்றன் குண்டு:** அணு குண்டைப் போலவே இது இருக்கும். ஆனால் அணுகுண்டுவெடிச் சன்னங்களையும் அனல் கக்கும் உஷ்ணத்தையும் வெடித்தவுடன் பரப்பி சாகடிப்பதுபோல இது உடனேயே கொல்வதில்லை. இது 'தோலிருக்கச் சுளை வாங்கும்' தன்மையுள்ளது. வெடித்தாலும் சத்தமோ, பொறியோ பறக்காது; கேட்காது. வெடிப்பதும் யாருக்கும் (விஞ்ஞானிகள் தவிர) தெரியாது! ஆனால் இது வெடிக்கப்பட்டால், விஷம்!—உலகம் நரகமாக மாற வேண்டியதே! மீட்சி இல்லை. அத்தனை பயங்கரமான அசுரக் குண்டு இது. இந்தக் குண்டு வெடிப்பதால் ஏற்படும் நைட்ரோன் என்ற விஷ வாயு மனித உடல்களில் புகுந்து இரத்தநாளங்களை அசுத்தப்படுத்தி மனிதர்களைக் கொன்றுவிடும்! இது வெடிக்கப்பட்டஇடத்துக்கு அருகேயுள்ள பிரதேசங்களில்வாழ்பவர்கள் விரைவாகவும், தூர இடங்களிலுள்ளவர்க்ள் காலப் போக்கில் ஆனால் மிகப் பரிதாபமாக பயங்கரமாக மரிப்பார்கள்!

**'சூப்பர்' குண்டு:** இந்தக் குண்டு ஜலவாயுக் குண்டின் மிகப் பெரிய இராட்சத அளவுள்ளது 100,000,000 தொன் எடையுள்ள T.N.T. என்ற அழிப்புச் சக்திக்கும் சமமானது. பெரிய ஜலவாயுக் குண்டைப் போல ஏழுமடங்கு அதிகம் சக்திகொண்டது! 1954 ல் அமெரிக்கா இந்தக் குண்டைப் பரீட்சித்த போது பசுபிக் தீவுகள் இருந்த சுவடே தெரியாமல் அழிந்தன! —ரஷ்யாவிடமுள்ள இந்தக் குண்டு, 1945-ல் ஹிரோஷிமாவை அழித்த அணு!குண்டைப் போல 5,000 மடங்கு அழிக்கும் சக்தி கொண்டது! இந்தக் குண்டு வெடித்து அதிலிருந்து விழுகின்ற ஆட்கொல்லி அணுக்கதிர்கள் அந்தப் பிரதேசத்தில் பல ஆண்டுகளுக்கு மனித நடமாட்டமே இல்லாதபடி ஆக்கி விடவல்லன! அதுமட்டுமல்ல; வான் வெளியில் வெடிக்கப்படும் இக்குண்டுகளிலிருந்துவெளிப்படும் ஆட்கொல்லி அணுக்கதிர்கள் நாலா திசைகளிலும் மழைமுகில்கள் முதலியவற்றுடன் படிந்து விடுகின்றன. பிறகு அவை பூமிக்கு இறங்கிவிடுகின்றன. குடிதண்ணீர், உணவு

## ★ அணு உற்பத்தி சமாதானத்துக்கு சாவுமணி!

## ★ ★ பூமியை நச்சுக் குகையாக்காதீர்!

## ★ ★ ★ சமாதான கோஷம் வலுக்கட்டும்!

### யுத்தம் மூளுமா?

பெர்லின் நெருக்கடி 3-வது உலகத்துக்கு அடிகோலுமா? என உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கின்றன. கடந்த யுத்தத்தில் ஜெர்மனியைத் துண்டாடி மேற்குப்பகுதியை தங்கள் ஆதிக்கத்துக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றன, மேற்குவல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் தேசங்கள். கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவின் செல்வாக்குக்குள் உள்ளது. ஜெர்மனியில் இறங்கும் விமானங்கள் தமது பிரதேசத்துக்கூடாக இறங்க வேண்டும் என சென்றமாதம் ரஷ்யா உத்தரவிட்டது. தங்கள் விமானங்கள் ரஷ்யாவின் பரிசோதனைக்கு உள்ளாகமுடியாது என மேற்குநாடுகள் மறுத்துவிட்டன. இன்று இருபகுதியாரும் 'உரச'த் துவங்கிவிட்டார்கள்! இராணுவத்துருப்புகள் கொண்டுபோய்க் குவிக்கப்பட்டிருக்கிறது! குண்டுகள் தயார்! எல்லைக் கோட்டில் நின்றபடி இருபகுதி காவல் படைகளும் தினமும் 'சொறிந்து' கொள்வதாக செய்திகள் வருகின்றன. எந்நோரமும் பொறிகிளம்பலாம்! அது மூன்றாவது உலகயுத்தத்தை மூட்டிவிடுமா?

### —பேட்றண்ட் ரசலு

வெகுஜன இயக்கமாக ஆ
களில் "அணு ஆயுத உற
செய்" என்ற கோஷம்
யில் லண்டனில் கூட சமாதான
ட்டம்—அணு ஆயுத உற்பத்திக
றது! அதற்குத் தலைமை தாங்
வாழ்ந்துகொண்டிருக்கும் ஒப்பற
ரண்ட் ரஸ்ஸல்! வயதில் மிக
மதிக்கப்படுபவர். நச்சுப் புகை
கால சந்ததிக்கு ஏற்படப்போ
தடுத்து நிறுத்தும் படி குரல் எ
டுமை இழைக்கப்பட்டு விட்ட
மீறியதாக, ஊர்வலம் நடத்திய
பங்கம் விளைத்ததாக குற்றஞ்சா
றம் அவருக்கும் மற்றவர்களு
கொடுத்திருக்கிறது! ஒரு பேட
அடக்கு முறையால் ஒடுக்கிவி
வாயை அடைக்க முடியாது!

ரும் வரை — இப்படிச்

கொண்டிருக்கின்றன. பிரிட்டன், பிரான்ஸ், சீன யப்பான் முதலிய நாடு
நிற்கின்றன. இந்நிலையில் ஏதாவது காரணத்தைவைத்துக் கொண்டு

# னுக்குண்டு!

டு: இந்தக் குண்
சத்தமும் தாக்
ங்கு அணுகுண்
ம் அதிகம். ஒரு
ஜலக் குண்டின்
தான் கூறலாம்.
டில் வாசல் திரி
நப்பட்டிருக்கிற
வெடித்ததும் கு
அமுக்கி வைக்

100,000,000 தொன் எடையுள்ள T.N.T. என்ற அழிப்புச் சக்திக்கும் சமமானது. பெரிய ஜலவாயுக் குண்டைப் போல ஏழுமடங்கு அதிகம் சக்திகொண்டது! 1954 ல் அமெரிக்கா இந்தக் குண்டைப் பரீட்சித்த போது பசுபிக் தீவுகள் இருந்த சுவடே தெரியாமல் அழிந்தன! —ரஷ்யாவிடமுள்ள இந்தக் கு

ப்பொருட்கள் மூலமாக இந்த நச்சுக் கதிர்கள் மனிதர்களின் உடலுக்குள் புகுந்து விடுகின்றன. உள்ளே புகுந்த — ஸ்ட்றேனியம் 90 — என்னும் ஆட்கொல்லி நச்சுக் கதிர், வளரும் குழந்தைகளின் எலும்புகளைத் தாக்குகிறது. அதனால் இளம் சந்ததியினர் புற்றுநோய் முதலிய மாரு வியாதிகளால் மடிந்துவிடுவர்.

இன்று இந்தப் பயங்கரக் குண்டுகளையும் அணு ஆயுதங்களையும் அமெரிக்காவும் ரஷ்யாவும் பெருமளவில் செய்து குவித்துக்கொண்டிருந்தாலும், மற்றும் நாடுகளும் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன

பிரிட்டன்:- அமெரிக்காவை யொட்டி அணுக்குண்டுகளைத் தயாரிப்பதுடன், ஆகாயத்தில் ரஷ்யா குண்டுகளைப் பரீட்சித்துப் பார்க்கிறதா என வான வெளியில் ஒட்டி நின்று உளவு பார்க்க நூதன 'கண்' ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாம்! பூமியதிர்ச்சி ரஷ்யா குண்டுவெடிப்பதால் உண்டாகிறதா அல்லது இயற்கையாக ஏற்படுகிறதா என்பதையறிவதற்கு ஒரு 'கர்தும்' கண்டுபிடித்திருக்கிறதாம்!

பிரான்ஸ்: சமாதான ஒப்பந்த காலத்திலேயே கள்ளங்களவாக அணுகுண்டுகளைத் தயாரித்து கடந்த 13-2-60 க்கும் 25-4-61 க்கும் இடையில் 4 தடவை சகாரா பாலைவனத்தில் பரீட்சை நடத்தி தன்னிடம் குண்டுகளிருப்பதைப் பகிரங்கமாகப் பட்டவர்த்தனம் செய்துள்ளது!

சீன: இன்னும் ஒரு வருடத்தில் தனது அணுகுண்டுப் பரீட்சையை நடத்த இருக்கிறது. செக்கோஸ்லவேகியா, இஸ்ரேல், ஜெர்மனி, யப்பான் தேசங்களும் விரைவில் அணு ஆயுதங்களைப் பரீட்சிக்க இருக்கின்றன!

அமெரிக்காவும் பிரிட்டனும் இரகசியமாக அணுகுண்டு தயாரிப்பி லீடுபட்டுள்ளதாகவும், அந்த நாடுகளின் ஒத்துழைப்போடுதான் பிரான்சு சகாரா பாலைவனத்தில் அணுகுண்டுவெடிப்புப் பயிற்சியை நடத்தியதாகவும், அதனுல் உலக நெருக்கடியை சமாளிக்க ரஷ்யாவுக்கும் ஜலவாயுக் குண்டுகள் இனித் தேவை எனக்கூறி ரஷ்யா அணுவாயுத உற்பத்தியைமீண்டும் ஆரம்பிக்கிறதென்பதை ரஷ்ய முதல்வர் நிகிட்டா குருஷேவ் சென்ற ஆகஸ்ட் மாதம் 30ந் திகதி மொஸ்கோ வானெலிமூலம் அகில உலகுக்கும் பிரகடனப் படுத்திவிட்டார்!

திரு. குருஷ்சேவ் பிரகடனப் படுத்தி அடுத்த 48 மணி நேரத்துள் ரஷ்ய ஜலவாயுக் குண்டுப் பரீட்சை மத்திய ஆசியாவிலுள்ள செமிபலட்டின்ஸ் என்னும் வெளியில் நடைபெற்றது. ரஷ்யா வெடித்த இந்தக் குண்டு-1945ல் இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஹிரோஷிமா நகரைத் தாக்கித் தரை மட்டமாக்கி இன்னமும் புல்பூண்டற்ற சுடலைக் காடாக ஆக்கியுள்ள அந்த அணுகுண்டிலும் பார்க்கப் பலமடங்கு பெரிதும், அதிகம் அழிவை ஏற்படுத்தக் கூடியதுமாகும்! இந்தப் பயங்கரக் குண்டுக்கு முன்பே பல அணுகுண்டுகள் ரஷ்யாவின் கைவசம் உண்டு. அவற்றில் சிலவற்றை 1958 நவம்பரில், ரஷ்யா பரீட்சித்துப் பார்த்திருக்கிறது.

ரஷ்யா கடந்தமாதம் செய்த ஜலவாயுக் குண்டுப் பரீட்சையைத் தொடர்ந்து மேற்கு வல்லரசுகள் தாமும் நைட்ரோன் குண்டுகள், ஜலவாயுக் குண்டுகளைப் பரீட்சிக்கப் போவதாக மிரட்டுகின்றன. அமெரிக்க விஞ்ஞானிகள் அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் உத்தரவுக்காக காத்திருக்கிருர்கள். கென்னடியின் கட்டளை பிறந்தால் அசுரக் குண்டுகளான நைட்ரோன் குண்டுகள் எந்நேரமும்

(11ம் பக்கம் பார்க்க)

## தானத்துக்கு சாவுமணி!

## குகையாக்காதீர்!

## காஷம் வலுக்கட்டும்!

நச்சு ஜலவாயு
வளியேறி வான
மெங்கணும் ப
இதிலிருந்து ஏ
லும் அதிர்ச்சி
டிலும் பார்க்க
ங்கானவை.
ம் பலமடங்கு
படும்!

ண்டு, 1945-ல் ஹிரோஷிமாவை அழித்த அணுகுண்டைப் போல 5,000 மடங்கு அழிக்கும் சக்தி கொண்டது! இந்தக் குண்டு வெடித்து அதிலிருந்து விழுகின்ற ஆட்கொல்லி அணுக்கதிர்கள் அந்தப் பிரதேசத்தில் பல ஆண்டுகளுக்கு மனித நடமாட்டமே இல்லாதபடி ஆ

டு: அணு குண்
இது இருக்கும்.
ண்டுவெடிச் சன்
ல் கக்கும் உஷ்
வெடித்தவுடன்
பதுபோல இது
ால்வதில்லை. இ
ச் சுளை வாங்கு'
து. வெடித்தா
, பொறியோ
ட்காது. வெடிப்
ம் (விஞ்ஞானிக
யாது! ஆனுல்
பட்டால், விஷ
ரகமாக மாற
மீட்சி இல்லை.
ரமான அசுரக்
இந்தக் குண்டு
ஏற்படும் நைட்
ஷ வாயு மனித
ந்து இரத்தநா
ப்படுத்தி மனி
ன்றுவிடும்! இது
இடத்துக்கு அ
தேசங்களில்வா
ரவாகவும், தூ
ளவர்கள் கா
னுல் மிகப்பரி
கரமாக மரிப்

: இந்தக் குண்
ண்டின் மிகப்
த அளவுள்ளது

## —பேட்றண்ட் ரசலுக்கு சிறை!—

வெகுஜன இயக்கமாக ஆசிய ஆபிரிக்க கண்டங்களில் "அணு ஆயுத உற்பத்தியைத் தடை செய்" என்ற கோஷம் வலுக்கிறது!—அண்மையில் லண்டனில் கூட சமாதான பிரேமிகளின் ஆர்ப்பாட்டம்—அணு ஆயுத உற்பத்திக்கு எதிராக நடைபெற்றது! அதற்குத் தலைமை தாங்கி நடத்தியவர், இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் ஒப்பற்ற தத்துவ ஞானி பேட்ரண்ட் ரஸ்ஸல்! வயதில் மிக முதியவர்: உலகத்தால் மதிக்கப்படுபவர். நச்சுப் புகை மண்டலங்களால் வருங்கால சந்ததிக்கு ஏற்படப்போகும் பயங்கர விளைவைத் தடுத்து நிறுத்தும் படி குரல் எழுப்பிய அவருக்கு கொடுமை இழைக்கப்பட்டு விட்டது!—பொலிஸ்தடையை மீறியதாக, ஊர்வலம் நடத்தியதாக சமாதானத்துக்கு பங்கம் விளைத்ததாக குற்றஞ்சாட்டி லண்டன் நீதிமன்றம் அவருக்கும் மற்றவர்களுக்கும் சிறைத்தண்டனை கொடுத்திருக்கிறது! ஒரு பேட்ரண்ட் ரசலின் வாயை அடக்கு முறையால் ஒடுக்கிவிட்டாலும், உலகத்தின் வாயை அடைக்க முடியாது!

க்கி விடவல்லன! அதுமட்டுமல்ல; வான் வெளியில் வெடிக்கப்படும் இக்குண்டுகளிலிருந்துவெளிப்படும் ஆட்கொல்லி அணுக்கதிர்கள் நாலா திசைகளிலும் மழைமுகில்கள் முதலியவற்றுடன் படிந்து விடுகின்றன. பிறகு அவை பூமிக்கு இறங்கிவிடுகின்றன. குடிதண்ணீர், உணவு

# மனைவியை மாற்றுனுக்கு விற்றார்கள்!

கட்டிய மனைவியை, அடுத்தவர்களுக்கு விற்பனை செய்வதென்பது இங்கிலாந்தில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமே இன்று சட்டப்படி பெரிய குற்றம். என்றாலும், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலும் ஒரு கணவன் தன்மனைவியை விற்கும் பழக்கம் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது! அவர்களில் எவரும் தாம் சட்ட விரோதமாக நடந்து கொண்டதாக உணரவே இல்லை; செலவில்லாமல் எளிதாக விவாகரத்துச் செய்து விட்டதாகவே அவர்கள் கருதினார்கள்.

ஒரு சரித்திர ஆசிரியர் தம் நூலில் இதைப்பற்றி விளக்கும்போது, "ஐரோப்பாவில் நெடுங்காலாமாக நடந்துவந்த 'நெப்போலியப் போர்கள்' கிறிஸ்துவுக்குப் பின் 1815-ஆம் ஆண்டில் முடிவு பெற்றதிலிருந்து இந்த மனப்பான்மை பாமர ஜனங்களிடம் எழுந்தது. அந்தப் போர்களில் ஆங்கிலத் துருப்புக்களும், மாலுமிகளும் ஈடுபட்டு, நாடுவிட்டுக் கடல் கடந்து வெகுகாலம் போர் புரிந்தார்கள்; அது முடிவடைந்த பின்னரே தாய்நாடு திரும்பினார்கள். வீட்டை அடைந்ததும், அந்தப் போர் வீரர்களில் பலருடைய மனைவிமார்கள் தங்கள் கணவன்மார் யுத்தத்தில் மாண்டு விட்டதாக நம்பி, மறுமணம் புரிந்துகொண்டு வாழ்வதைக் கண்டார்கள். இந்த நிலையில் முதல் கணவன் அந்த மனைவியைச் சந்தையில் விற்க, புதிய கணவன் அவளை விலைக்கு வாங்கினான். இதனுல் இரண்டாவது விவாகம் உறுதிப்படுவதோடு, முதல் கணவனும் விவாகக் கட்டிலிருந்து விடுபட்டு, வேறு பெண்ணை மணந்து கொள்ள வசதி ஏற்பட்டது: எனவே இது நியாயமும், சட்டத்துக்கு உகந்ததுமாகும் என்று அக்காலத்தில் கருதப்பட்டது'' என்று கூறுகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு வெகுகாலத்துக்கு முன்பே கணவன் மனைவியை விற்பனை மூலம் விலக்கி விடுவது வழக்கத்திலிருந்து வந்திருக்கிறது.

கிரிமால்டி என்பவரின் 'பரம்பரைச் சந்ததியின் ஆரம்பம்' என்ற நூலில் ஆறு நூற்றாண்டுகளுக்கு முந்திய தேதியிட்ட ஒரு விசித்திர தஸ்தாவேஜு அகப்பட்டிருக்கிறது. அதில், "ஸர். ரால்ப் டி கெமாயின் வாரிசும், மகனுமான ஜோன் டி கெமாய் ஆகிய நான், இதனுல் சகல கிறிஸ்தவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், என் முழுவிருப்பத்துடன் என் மனைவியும், ஸர். ஜோன் டி கெரஸ்டன் என்பவரின் வாரிசுமான மார்கரெட்டை, ஸர். வில்லியத்துக்குக் கொடுத்துவிட்டது தவிர, மேலே குறிப்பிட்ட மார்கரட்டுக்குச் சொந்தமானவையாகவோ, இனிச் சொந்தமாகக் கூடியவையாகவோ உள்ள சகல பொருட்களையும், அவைகளில் நான் கொண்டாடக்கூடிய உரிமைகளுடன் மேற்குறிப்பிட்ட ஸர். வில்லியம் அடைந்து கொள்ளும்படி இதன் மூலம் கொடுத்துவிட்டபடியால், நானே அல்லது என் பெயரால் வேறு யாரோ இனி அந்த மார்கரட்டிடமோ, அல்லது அவளுக்குச் சொந்தமான பொருட்களிலோ எந்தவிதமான உரிமையும் கொண்டாட இடம் இல்லை. மார்கரட், மேற்காணும் ஸர். வில்லியத்துடன் அவருடைய விருப்பப்படி இருந்துவர வேண்டியது. இவ்விதம் சம்மதித்து இந்த விலைச் சாசனம் செய்து கொடுத்தேன். சாட்சிகளின் முன்னிலையில் என் கையெழுத்து, முத்திரையும் இடப்பெற்றன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது! கையெழுத்து, முத்திரை, சாட்சிகள் எல்லாம் அமைந்து அந்த விலைப் பத்திரம் பூர்த்தியாகியிருந்தும்கூட, பாராளுமன்றம் இந்தச் சாசனத்தைச் சட்ட விரோதமானதென்றும், செல்லாது என்றும் சொல்லி விட்டதாம்!

1764-ஆம் ஆண்டில் 'பூர்ஹாம்' என்ற சந்தையில், ஒரு புருஷன் கடைமாடுகளில்தான்பொறுக்கி எடுக்கும் காளை மாட்டுக்குத் தன் மனைவியைப் பண்டமாற்றுச் செய்யத் தயார் என்று சொல்ல, மாட்டுக் கடைக்காரனும் சரிஎன்று கூறினான். மனைவியும் ஆவலுடன் அதை ஆமோதித்தாள். மறுநாள் கழுத்தில் கயிறுடன் மனைவி மாட்டுக்காரனின் கைக்கு மாறினாள். கணவன் காளை மாட்டுடன் வீடு திரும்பினான். பிறகு அதையும் அவன் ஒரு கினிக்கு விற்றுவிட்டானும்!

### களனிநதி தீரத்திலே...... (9)

# பாவ விமோசனம்

‘ஈழத்துச் சோமு’



எனது சக உத்தியோகத்தர்களும், பல தொழிலாளர்களும் என்னை வந்து பார்த்துக்கொண்டு சென்றனர்—என்னை ஒழித்திருந்து தாக்கிய கருங்காலியைக்கண்டு பிடித்து பழிதீர்த்து விடுவதற்காக, வெளியே வேலை நிறுத்தம்மிகமும்முரமாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ரேசலின் என்னைப்பார்க்க வந்திருந்தபொழுது முகத்தில் வாட்டமும் அதிர்ச்சியும் குடிகொண்டிருந்தன. நான் அவளிடம் முதலில் எதுவும் பேசவில்லை. அவளாகவே சொன்னாள்: “நீங்கள் கொஞ்சம் முன் ஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக்கலாம்:—“அடிதவறிவேறெங்காவது பட்டிருந்தால் ஐயோ, பாவம் மிகவும் பரிதாபமாகஇருக்குமே!” தளதளத்த குரலில் சொன்னாள்.

நான் மௌனமாகவே இருந்தேன். எனது வெறுப்பும் கோபமும் இன்னும் அடிமனதில் உறைந்து இருப்பதை அறிந்து கொண்டவள் போல அவளே மீண்டும் பேசினாள்.

“முதலிலிருந்தே என்னை நீங்கள் மிகவும் தவறாக கருதி வந்து விட்டீர்களாக்கும். வித்தியாசமான எண்ணம் எதுவுமின்றி உங்களிருவர் மீதும் வெறும் நட்பாகவே பழகி வந்தேன். அதை நீங்கள் தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டீர்கள். சத்தியமாகச் சொல்லுகிறேன், நடா எங்களில்லத்துக்கு குடிவரும் வரை — இப்படிச் சூழ் நிலை ஏற்படுமென துளியும் சிந்திக்கவில்லை. அது வரை உங்களுக்கும் எனக்கும் இருந்தது போன்ற நட்புத்தான் நடாவுக்கும் எனக்குமிடையிலிருந்தது. சந்தர்ப்பம் சிலரை தனது பொறியில் விழுத்தி காதலிக்கத்தான் வேண்டுமென நிர்ப்பந்தித்து விடுகிறது. நடாவின் பிடிவாதக் கோரிக்கைக்காவும், அவரது நிலைக்காகவும் இப்போது நான் அவரது எண்ணத்துக்கு இணங்கியே ஆகவேண்டியுள்ளது. நான் அவரை திருமணம் செய்யாவிட்டால் தற்கொலை செய்து கொள்வதாகச் சொல்லும் பொழுது நானும்பெண்தானே?—சம்மதம் தெரிவித்து விட்டேன்.”—

ரேசி ஒரே மூச்சில்பேசி முடித்து விட்டு மௌனமாக இருந்தாள். அவளது முகத்தைப் பார்த்தேன். அதில் சலனமோ, கலக்கமோ, எதுவுமின்றி—குற்றங்களைக் கூறிப்பாதிரியாரிடம் பாவ விமோசனம் பெற்று விட்டவள் போல — நிறைவாக இருந்தாள்.

நான் பதிலெதுவும் சொல்லமுடியாமல்ஒரே மௌனமாகவே இருந்தேன். தொடர்ந்தும் பலர் என்னைப்பார்க்க வந்து கொண்டிருந்ததால், ரேசி எழுந்து சென்றுவிட்டாள்.

எனது நல்ல காலம் போலும், தலையில் ஏற்பட்ட காயம் அப்படி ஒன்றும் ஆழமாக இருக்கவில்லை. மூன்று தினங்கள் மட்டும் ஆஸ்பத்திரியிலிருந்து விட்டு வீட்டுக்குச் சென்று விட்டேன். அடுத்த சில நாட்களுக்கு பரிபூரண ஓய்வு தேவையென டொக்டர்கள் எச்சரித்திருந்ததால்-உடனேயே ஓடிப்போய் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற மனத்துருதுருப்பை அடக்கிக்கொண்டு வீட்டிலிருக்கவேண்டியதாகிவிட்டது. நடராசன் அவ்வப்போது தினமும் வீட்டுக்கு வந்து வேலை நிறுத்தப் புதினங்களைச் சொல்லுவான்; மற்றும் எனக்குத் தேவையானவைகளையும் கவனித்தான்.

வேலைநிறுத்தத்தில் நான் ஈடுபட்டதைப் பற்றியோ, தலையில் காயம் ஏற்பட்டது பற்றியோ அம்மாவுக்குத் தெரியாது. தபால் சேவை துண்டிக்கப்பட்டிருந்ததால் யாரும் அறிவிக்கவில்லை. அது நல்லதாகப் போயிற்று; அல்லது பாவம்; அவ எவ்வளவு கவலைப்பட்டிருப்பா?

அன்று நடராசன் என்னைப்பார்க்க வந்திருந்த பொழுது அம்மாவிடமிருந்து எனது திருமணம் சம்பந்தமாக முன்பு வந்திருந்த கடிதத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்துவிட்டு, அவனைப்பற்றி அவன் செய்திருக்கும் முடிபு என்ன என விசாரித்தேன்.

“அண்ணை...... அதைப் பற்றிக் கேட்டு இந்த நிலையில் நீங்கள் வீணாக மனத்தை யலட்டிக்கொள்ளக் கூடாது” என அவன் பிகுபண்ணினான்.

“நடா; நீ செய்யும் முடிவு சமுதாயம் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருந்தால் எனக்கொன்றும் ஆட்சேபமிராது,”

“அண்ணை! நான் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் ஒரு எழுத்தாளர்; எண்ணத்தாலும் எழுத்தாலும், ஒரு முற்போக்குச் சமுதாயத்தைக் காண உழைக்கின்றீர்கள். நீங்கள் எனது முடிவை ஆட்சேபிக்க நியாயமேயில்லை—ரேசியை நான் மணந்து கொள்வதாக எப்போதோ நிச்சயித்துவிட்டேன். நம் காதலில் நம்பிக்கையும் அதை நிறைவேற்றக்கூடிய மனத்தைரியமுமிருக்கிறது”—அவனது உறுதிமிக்க ஆணித்தரமான பேச்சுக்கு முன்னால் எதிர்வாதமிட என் மனம் கூச்சப்பட்டது.

நடாவின் குடும்ப நிலை எனக்கு நன்கு தெரிந்ததே அவனது தாய் அவனைச் சுற்றி எத்தனையோ கற்பனைகளைப் படரவிட்டிருக்கிறாள்—இவன் இப்படி ஊரை உதறிக்கொண்டு நடந்து கொண்டால் அந்தத் தாய் தாங்கவே மாட்டாள். தற்கொலைதான் செய்துகொள்வாள்!

“நடா உனது எதிர்காலத்துடன் உன் அம்மாவின் வாழ்வும் பின்னிக்கிடக்கிறதைமறந்து விட்டியோ’? பரிவாக அவனுக்குப் கடமையைச் சுட்டிக் காட்டினேன்.

நடராசன் மௌனமாக சில நிமிடநேரம் சிந்தித்துக்கொண்டிருந்து விட்டுச் சொன்னான்!

“அண்ணை; சத்தியமாக எனக்கு ஒரு உதவி செய். நிச்சயமாக நீ செய்ய வேண்டும். அம்மாவைச் சம்மதப்படுத்திக்கொண்டு தான் நான் இந்தத் திருமணத்தைச் செய்வேன். அதுவரை எனக்கும் ரேசிக்குமிடையிலுள்ள தொடர்புகளைப்பற்றி ஊரில் நீ எதுவுமேபேசப்படாது. சின்னவயசிலிருந்து நமக்குள் நிலவிவரும் நட்பின் மீது ஆணையாக...”—நடராசன் என் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான். அவன் என்னை இப்படிக்கெஞ்சியது இதுதான் முதற் தடவை!

அந்தத்தாய் மகனைப்பற்றிக்கட்டியெழுப்பியிருக்கும் மனக்கோட்டை — இந்தச் சம்பவங்களை கேள்விப்பட்டால் தகர்ந்து தரை மட்டமாகிவிடும். நடராசன் அவன் தாயைமட்டுமாவது இந்த மணத்துக்கு ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டால் அவன் திருமணத்தைப்பற்றி எனக்கு பெரிய ஆட்சேபமெதுவுமில்லை. அவன் அப்படிச் செய்வதாக வாக்குறுதியும் வழங்கிவிட்டான்.

அவன் வேண்டுகோட்படி நடப்பதாக நான் கையடித்துக் கொடுத்தேன்.

நடராசன் திருப்தியுடன் சிரித்துக்கொண்டு எழுந்து சென்றுவிட்டான்.

எதிரேநின்று நெஞ்சில் வேல் படும்படி எறிவதுதான் சுத்தவீரனுக்கு அழகு; அச்செயல் புறநானூற்றுக் காலத்துடன் முடிந்துவிட்டது. பின்னுக்கு நின்று முதுகில் குத்துதல், ஒழிந்திருந்து தாக்குதல் முதலிய பேடிச் செயல்களெல்லாம் “புதிய போர் முறைத்தந்திரங்கள்” என்ற பெயர்களோடு நடைமுறைக்கு வந்துள்ளதை தெரிந்திருப்பீர்கள். ஆனால், சைன்யத்தை வழிநடத்திச் செல்லும் தலைவன், எதிர்முகாமில் சரணடைந்துகொண்டு, போர்ப்படையைக் காலைவாரிவிடும் சம்பவங்கள் சரித்திரத்தில் நடைபெற்றிருப்பது மிக அரிது. இப்படியான முடிபு அந்தப் பொதுவேலை நிறுத்தத்துக்கும் ஏற்பட்டது! பட்டினியைப்பொருட்படுத்தாது—தகிக்கும் வெய்யிலில், தார் ரோட்டில், மிரட்டலுக்கும் வெருட்டலுக்கும் அஞ்சாது—இரண்டு வாரங்களாக அஞ்சாது வேலை நிறுத்தத்திலீடுபட்டிருந்த பல்லாயிரம் உழைப்பாளிகளும் வேலை நிறுத்தத்தை நடத்திய தலைவர்களால் கால் வாரி விடப்பட்டனர்! பொதுவேலை நிறுத்தம் பிசுபிசுத்தது!—பயன்? வேலைநிறுத்தம் செய்த நாட்களுக்குரிய சம்பளத்தையும் இழந்து—பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக அவர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டதுதான் மிச்சம்! (வளரும்)

**சேலம்**
S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்
**வீரிய விர்த்தி மாத்திரை**
மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00
**லேபனம் மெழுகு**
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகிய வைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
*Prop:* S. M. R. M. S
ராகலை பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)

கச்சியப்பருக்காகக் கச்சை கட்டுகிருரா 'ரேவதி'?

## காமரசத்தை இலக்கியக் கிண்ணத்தில் ஊற்றித்தருவதற்கு, கச்சியப்பரிடம்...

# கம்பர் பிச்சை வாங்கவேண்டும்!

"ஆபாசமான நிகழ்ச்சிகளின் பாடல்களின் பொருள்களாக அமைந்திருந்தாலும், அவற்றைச் செவ்வனே விளக்கிப் புலவர் கூறுவதற்கு ஒரு காரணமுண்டு. தீதானதொன்றை மக்கள் மனதில் தீதென்று எடுத்துக் காட்டுவதற்கு, தீமையானவற்றை நன்கு விளக்கிச்சொன்னுலேயே, அவர்கள் அதனை மனத்தில் நன்கு பதியவைத்து அவற்றின் இழிமையையுணர்ந்து நன்மையைப் பேணுவார்கள். இதற்காகவே புலவர் கள்ளுண்ணல் என்ற தீதான பழக்கத்தால் விளையும் சம்பவங்களைப் பெண்களின் காமக்கிளர்ச்சியின் மூலம் காட்டுகின்ருர்".

இது கச்சியப்பருக்காகக் கச்சை கட்டும் ரேவதியின் வாதம். "கந்தபுராணத்திலும் காணலாம் கம்பரசத்தை" என்ற தலைப்பில் எழுதத் தொடங்கிய ரேவதி, ஏன்தான் கவிக்காக இவ்வளவு பரிந்து பேசுகிருரோ, தெரியவில்லை. கந்தபுராணம் ஓர் ஆபாசக் களஞ்சியம். அதில் இன உணர்ச்சியை எழுப்பும் இழிந்த வர்ணனைகள் ஏராளம், ஏராளம்! ஆரணங்குகளின் தழுக்கு, மினுக்கு, குலுக்குகளை வர்ணிப்பதில் கச்சியப்பருக்கு நிகர் கச்சியப்பரே. கச்சியப்பரின் சொந்த அனுபவங்களை வெளியிடவே அவர் கந்தபுராணத்தின் மூலத்தில் இல்லாத முசுகுந்தன் சேனை செல்லும் காட்சியைப் புகுத்தியிருக்கிருர். தெய்வயானையம்மைத் திருமணப் படலம் கச்சியப்பரின் காம உணர்ச்சியைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. காமரசத்தை இலக்கியக் கிண்ணத்திலே ஊற்றித் தருவதில் கம்பர்கூடக் கச்சியப்பரிடம் பிச்சை பெற வேண்டும். கச்சியப்பரசம் அளவிலும் ஒன்றும் குறைந்ததல்ல, மருந்தைப் போல் ஒவ்வொரு 'டோசாகச் சுவைப்பதற்கு! கச்சியப்பரசம் இறைக்க இறைக்கக் குறையாத பெருங்குளம் நிறைய இருக்கிறது: முசுகுந்தனின் சேனை நீராடும்காட்சி ஒன்றே போதும்.

உடலில் உடை இருக்கிறதா இல்லையா என்றே சந்தேகப் படும்படியான ஆடையை உடுத்தியிருக்கின்றனர் பெண்கள். (கச்சியப்பர் மாபெரும் தீர்க்கதரிசி. ஏனென்ருல், இருபதாம் நூற்ருண்டுப் பெண்களின் உடையைப் பற்றி அவர் தம் காலத்திலேயே கற்பனை செய்துவிட்டாரல்லவா?) இந்தக் கண்ணுடி உடையோடு குளத்தில் இறங்கிக் கும்மாளமிடுகின்றனர், அந்தக் கோமள வல்லிகள். உடை நனைந்ததும், அவர்களுடைய உடலுறுப்புகள் அத்தனையும் பளிச்சென்று வெளியே தெரிகின்றன. "பெண்கள் மாத்திரம் தானே குளிக்கின்றனர். அவர்கள் நிர்வாணமாய்க் குளித்தால் தான் என்ன" என்று கேட்டுவிடாதீர்கள். குளிப்பது பெண்கள் மட்டுமல்ல. அவர்களுடைய கொழுநன் மார்களும்தான். ஆண்கள் பலர் முன்னிலையில் இந்தக் கோலத்தோடு பெண்கள் இருப்பார்களா? கவிதையை நோக்குங்கள்:-

நோக்கினும் நுழைகுருத
நுண்டுகின் மறைந்த வல்கு
நோக்குதண் பெய்கையாடுஞ்
செவ்வியிற் தெரியத்தோன்ற
நீக்கரும் பெருநாண் கொண்டு
நின்றிடா தொருத்தியோடித்,
தாக்கணங் கென்னப் போய்த்தன்
கொழுநனைத் தழுவிக் கொண்டாள்.

அல்குல் தெரியும்படி ஆடையை இந்த 'ஸ்புட்னிக்' யுகத்திலும் பெண்களணிய வெட்கப் படுகிருர்களே. குளிக்குமிடம் தானே என்று எண்ணுகிறீர்களா? ஆனுல் ஆண்கள் பலர் முன்னிலையில்! வெட்கம்! வெட்கம்! விலைமாதரினும் கேடான இவர்கள் வெட்கப்படுவதாகக் கூறுவதோ, வெட்கத்திலும் வெட்கம்! மங்கையரையும் அவர் தம் தெங்கன்ன கொங்கைகளையும் வர்ணிப்பதில் கம்பருக்கு இரண்டாமவரல்ல கச்சியப்பர். "பொற்புறு படாத்தினீங்கிப் பூண்முலை சிறிது தோன்றப், பற் பகனேற்று வேண்டும் பரிசில் பெற்ருரை யொத்தான்." இந்த எண்ணம் சிவாச்சாரியாருக்கு எழலாமா?

"விடந்தரு வேற்கணல்லாள்
வெளிப்படு கொங்கை தன்னைப்
படந்தன்னில் மறைத்தலோடும்
பாங்கிலோர் காளை பாராத்
தொடர்ந்தனனவள் பின் போனுன்
றுணை முலைப் படத்திற் சிக்கிக்
கிடந்ததன் மதியை மீட்கக்
கிலேசமோ டேகுவான் போல்"

"பரதனங்கவரு மல்குற்
பரத்தையர் தம்மைப் பாரா,
விரதநன் முனிவர் தாமும்
வேதியர் பலருமீண்டிச்
சுரதநண்புடைய ராகுங்
கணிகையர் தோளாற்ருளா
லுரதனந் தன்னுற்ருக்க
வுளைந்துளைந் தொதுங்கிப் போனுர்"

கந்தபுராணத்தில் ஊற்றெடுத்துப் பாயும் காமரசம் கவிஞரின் சொந்த அநுபவமே என்பதற்கு இவ்விரு பாக்களுமே போதுமே. ஆனுல் இவற்றைப்போல இன்னும் எத்தனையோ!

"கலையகலல் குலார் பாற்
காதலான் முயங்கி வல்லே
யுலைவுறு சேக்கைப் போரில்
உடைந்திடு குமரரேபோன்
மலைபொரு பிடிகளோடு
மலைந்துதன் மதநீர் சிந்தி
நிலையழி வெய்தி வெள்கி
நின்றதோர் நெடுநல் வேழம்."

மக்கள் மட்டுமல்ல, மாக்கள் கூடக் கச்சியப்பருக்குக் காமவுணர்ச்சியையே எழுப்பியிருக்கின்றனர். அல்குலும் கொங்கையுமில்லாத கற்பனை மட்டரகமானவை என்ற கருத்துப் போலும் சிவாசாரியாருக்கு ஆமாம். அவர்தான் "கடலிலும் பெரிய தாங் காமம் மூழ்கிய வரா"யிற்றே.

கந்தபுராணத்தில் கச்சியப்பரசம் தேவையா? தெய்வ நூலில் உடல் இன்பத்தைப்பற்றிக் கூற வேண்டுமா? காம உணர்ச்சியா கந்தனை நினைத்தால் ஏற்படுவது? கச்சியப்பரசம் இவ்வளவிருந்தும் ஏன் ரேவதியார் வெளியிடாமல் மூடி மறைக்கின்ருர்? இவ்விஷயங்களை வெளியிடுவதில் பெண்களுக்கே இயல்பாக இருக்கும்நாணமா, அல்லது அருவருப்பா? பழுத்த சிவத்தொண்டர் நாணம் சிறிதுமில்லாமல் காவியத்தில் சேர்த்திருக்கிருரே இந்தக் காமக் களஞ்சியத்தை! ஓட்டைகள் பல உண்டு என்றறிந்தும் ரேவதியார் பூசி மெழுகுவதேன்?

# விசித்திரமான வழக்குகள்

## பன்றிக்கு மரணதண்டனை;

### அதன் குட்டிகளுக்கு மன்னிப்பு!

உலக சரித்திரத்திலேயே மிக மிக நீண்ட காலமாக— அதாவது, நாற்பத்திரண்டு வருடங்கள் வரை தொடர்ந்து ஒரு வழக்கு நடந்தது என்ருல் ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா? இதில் மற்றொரு விசித்திரமும் உண்டு. இவ் வழக்கில் குற்றவாளி யார் தெரியுமா? ஒரு சிறு பூச்சிதான்!

முற்காலத்தில் ஐரோப்பாவில் இப்படி விலங்குகளைக் குற்றவாளிகளாக்கி வழக்குத் தொடர்வது அப்படி ஒன்றும் பிரமாதமான விஷயமல்ல. பிரான்ஸ் தேசத்தில் மட்டும் கி. பி. 1120 முதல் 1740 க்குள் இப்படி நாற்பத்தொன்பது சுவையான வழக்குகள் நடந்திருக்கின்றன. கடைசியாகநடந்த இந்தமாதிரி வழக்கில் ஒரு பசுவைக் கொலைக் குற்றத்துக்காகத் தூக்கிலிடும்படி கோர்ட்டார் உத்தரவிட்டார்கள். தண்டனையும் நிறைவேறியது!

1457-ஆம் ஆண்டு லாவேக்னி என்ற இடத்தில், ஒரு பெண் பன்றியும் அதன் ஆறு குட்டிகளும் ஒரு குழந்தையை உயிரோடு தின்றுவிட்டதாக வழக்கு நடைபெற்றது. அதில் பெண் பன்றிக்கு மரண தண்டனை விதித்தார்கள். அதன் ஆறு குட்டிகளுக்கு, அவற்றின் இளமையை உத்தேசித்தும்; அவை குழந்தையைத் தின்றிருக்கும் என்பதற்குத் தகுந்த ஆதாரம் இல்லாததாலும் சும்மா விட்டுவிட்டார்கள்.

மற்றொரு விநோத வழக்கும் நடைபெற்றது. 1474-ஆம் ஆண்டு, போஸில் என்ற இடத்தில்ஓர் 'ஆண் கோழி' முட்டையிட்டதாக எண்பிக்கப்பட்டது! இந்தமாதிரி முட்டைகளைத்தான் சூனியக்காரக் கிழவிகள் பயன்படுத்துவார்கள் என்று அந்தக்காலத்தில் ஜனங்களுக்குள் ஒரு மூடநம்பிக்கை இருந்து வந்தது. அந்த முட்டையை இட்டது கோழியாக இருக்கமுடியாது! ஒரு மந்திரவாதியாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிய கோர்ட்டார், அந்தக்கால வழக்கப்படி அந்தக் கோழியை உயிரோடு கொழுத்தும்படி உத்தரவிட்டார்களாம்!

வருமான வரியோ—அல்லது அரசாங்கத்தால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்க்கப்பட்டு வரும்வரிவகைகளில்ஒன்ருேவென எண்ணிவிடாதீர்கள். இது கானல் வரி-வெட்டு வரி-ஊர்சூழ்வரி போன்ற இலக்கிய வரிகளில் ஒன்று, ஆனல் பழைய இலக்கிய இலக்கண ஏடுகளை புரட்டி அரிக்காதீர்கள்.

## கலைஞரே!

வாரும், ஓய் கலைஞரே
வணக்கம், வந்தமரும்
நீரும் குழுவினரும்
நடித்த நாடகத்தால்

○

நெஞ்சு நிமிர்த்தி
நேராக விறைத்து
மஞ்சுதோய் வானத்தை
மேல்நோக்கிப் பார்த்து

○

நடக்கின்றீர், உமக்கு
நடந்த நடப்பென்ன?
நடத்திய கூத்தை
நானுந்தான் சுவைத்தேன்

○

தத்ரூப மாக
நிறமையாய் நடித்தீர்
அத்துணையும் உண்மை
ஆமாம், நடிகர்

○

திலகம், நம் சிவாஜி
கணேசனய் ஆகி
கலைஞராம் நடிகவேள்
ராதாவாய்த் தோன்றி

○

வெளுத்து வாங்கினீர்
வீறுநடை போட்டீர்
வெளுத்ததெல்லாம் பாலா?
வீணுக உடலை

○

அலட்டிக் கொண்டதெல்லாம்
அசலான கலையாமோ?
கலையின் அணுவைத்தான்
கண்டிலன் ஆங்கு?

○

சிவாஜியும் ராதாவும்
பாத்திரமாய் மாறுகையில்
அவாவுற்று அவர்போல்
அவராக ஆடுகின்றீர்!

○

பாத்திரமோ கிடந்து
பரிதவித்து துடிக்குது
நேத்திரங்கள் இருக்க
நேர்வழியை விலக்குவதோ?

○

திறமை துளிர்க்கையில்
திசைதப்பி செல்வது மேன்?
சிறப்பாக பாத்திரத்தை
சிந்திந்து நடித்திடுவீர்

○

அவராக இவராக
ஆகித் திணருமல்
நவமான கருத்தோடு
நனிசிறந்து ஆடிடுவீர்!

○

— புத்துராசன்.

# இப்படிச் சொன்னுர்கள்

### எதற்காகத் தியாகம்?

தியாகம்புரியுமாறு நாம் கேட்கப்பட்டுள்ளோம். நாம் வெளிப்படையாக கேட்கிறேம். எதற்காகத் தியாகம்? – இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு திட்டத்தின் தோற்றத்தைக்கூட எங்களுக்கு காண்பிக்கவில்லை!

அரசாங்க குமாஸ்தாக்கள்
சங்க 'றெட் ரேப்' தலையங்கம்

### உசார்!

19-10-61-ல் நாங்கள் பாராளுமன்றத்துக்கு வருவோம். போராடுவதற்கு நல்ல தெம்புடன் அங்கு தோற்றுவோம்.

டாக்டர் நாகநாதன்
(பத்திரிகை நிருபர் பேட்டியில்)

### அதிலேயே கண்!

கடந்த 25 வருடமாக அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றுவந்த என். எம்., இப்பொழுது 'அரசாங்கம் நல்லது; ஆனல் அது ஒரு பலவீனமான நிதிமந்திரியை வைத்திருக்கிறது' என நிதிமந்திரிப் பதவியிலே கண்வைத்திருக்கிருர்!

— டட்லி சேனநாயக்கா

### எங்கே பிச்சை கிடைக்கும்?

எமது நிதிமந்திரி பணத்திற்காகப் பிச்சைதேடி போகாத தேசம் இல்லை. அடுத்த வரித்திட்டத்தை தயாரிக்குமுன்பு, எங்கே பிச்சைக்குப் போகலாமென்று இப்பொழுது அவர் யோசித்துக் கொண்டிருக்கிருர்.

டாக்டர் என், எம். பெரேரா.
(குப்பியாவத்தை ச. ச. இளைஞர் கூட்டத்தில்)

### வேண்டுகோளும்......

யாழ். நகர அதிபர், யாழ். எம். பி, சில கி. ச தலைவர்களின் வேண்டுகோளின்படி இரண்டு புதிய சிறீ பஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டன.

— பத்திரிகைச்செய்தி

### வேண்டாத கோளும்!

யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் டிப்போ ஒன்றில் இ போ, ச. வுக்குச் சொந்தமான ஒரு பஸ்மீது வெடிக்குண்டு வீசியதன் பயனக அது தீப்பிடித்தது. அது பற்றிப் பொலீசார் புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

— உள்நாட்டு இலாக்கா அறிக்கை

### இலக்கியப் பாடசாலை

சென்ற ஆறுமாதகாலம் தடுப்புக் காவலில் இருக்கையில் திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற இந்நூல்களைப் படிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அடுத்தமுறை செல்ல வேண்டியேற்பட்டால் பதிற்றுப்பத்து நூலையும் படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும்

— அ. அமிர்தலிங்கம் எம். பி.
(பண்டிதர் அருளம்பலவனர் பாராட்டு விழாவில்)

### 'பாண்காரன்' ஆவதா!

நான் முன்னரெல்லாம் யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களை 'பேக்கரி'களை ஆரம்பிக்குமாறு ஆலோசனை கூறிவந்தேன். அவர்கள் இதை விரும்பவில்லை. ஏனெனில், பிறர் தம்மைப் 'பாண்காரன்' என்றுஅழைப்பதை அவர்கள் விரும்பவில்லை.

— எல். பி. என் சிங்கம்
(யாழ் ரோட்டறிச்சங்கக் கூட்டத்தில்)

### காலையில் எழுந்ததும் கசிப்பு!

வடமத்திய மாகாணத்திலுள்ள பள்ளிக்கூடமொன்றில் நான்சென்று பார்த்தபோது அங்கேபடிக்கும் 27 மாணவர்கள் தாம் காலையில் 'கசிப்பு' குடித்துவிட்டு வந்ததாக ஒப்புக் கொண்டார்கள்.

— எச். எம். பெரேரா.
(உலக குழந்தைகள் தின விழாவில்)

### இன்று உங்கள் சொத்து. நாளை?

தேயிலை, றப்பர் தோட்டங்களையோ, வேறு சொத்துக்களையோ வைத்திருப்பவர்கள், எதிர்காலத்தில் அவைகளைத் தமது சொத்துக்கள் எனக் கூறமுடியுமா என்பது சந்தேகமாகவேயுள்ளது. அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தினல் அவைகளைத் தானே எடுத்துக்கொள்ளவும் அதிகாரம் படைத்திருக்கிறது.

— எச். டபிள்யூ. அமரசூரியா
(மாத்தறைக் கல்லூரியில் நடந்த பொதுக்கூட்டத்தில்)

### ஐந்துவருடம் கழிந்துவிட்டால்......

யார் என்ன சொன்னலும் எங்கள் கொள்கைகளும் திட்டங்களும் அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின் நல்லபயனைக் கொடுக்கும். அதன்பின் கஷ்டமில்லாமல் மக்கள்வாழ முடியும்.

— கல்விமந்திரி
(பினிதொனிய மகாவித்தியாலயத்தில்)

## நெப்போலியனிஸம்!

எகிப்துப் படையெடுப்பு முடிந்தபிறகு, நெப்போலியன் தன் படையுடன் ஒரு பாலைவனத்தைக் கடந்து செல்ல நேரிட்டது. படைவீரர்கள் மிகுந்த கஷ்டத்துடன் அந்தப் பாலைவனத்தைக் கடந்துகொண்டிருந்தனர். பாலைவனத்தை முழுவதும் கடப்பதற்கு இன்னும் கொஞ்ச துரமே இருந்தது, எப்படியம் அதையும் கடந்துவிட முடியும் என்ற தைரியத்தில் படைவீரர்கள் முன்னேறிக்கொண்டிருந்தார்கள் நெப்போலியனின் நா வறண்டுவிட்டது. நடக்க முடியாமல் 'தண்ணீர், தண்ணீர்' என்று கதறினன். வீரர்கள் நாலாபக்கங்களிலும் ஓடினர்கள் அரை மணி நேரத்திற்குப்பின் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எங்கிருந்தோ தேடிக் கொண்டுவந்து சேர்த்தான் ஒருவன். ஆவலுடன் அந்தத் தண்ணீர் பாத்திரத்தை எடுத்து உதட்டருகில் கொண்டு சென்றன் நெப்போலியன் சுற்றிநின்றுகொன்டிருந்த வீரர்கள் அவன் கண்ணில் பட்டனர், அவர்களையே சற்றுநேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்த அவன், தண்ணீரைப் பருகாமலே அந்தப் பாத்திரத்தை மணலில் வீசிவிட்டு, உற்சாகத்துடன் எழுந்துநடந்தான்!

### நாவலன்

நாவலன் என்ற பத்திரிகைக்கு நிருபர்கள் தேவை விண்ணப்பிக்கவும்

காரியதரிசி,
ஸ்ரீலங்கா சைவ ஆதீனம்,
$128\frac{1}{1}$, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இத்தால் சகலரும் அறிவது...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

வித்த "சைவத்திருமணம்" என்னும் நூலாசிரியர் வேதாகம பூஷணம் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் B. A. அவர்கள் சொல்லிய அத்தனை குற்றங்களும் செய்யப்படவேண்டி வரும்.

யாழ்ப்பாணம் நா. கணேசலிங்கம்.

### பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதா?

எதிரியாக இருக்கலாம், கொள்கை வேறுபட்டவனக இருக்கலாம் அவன் அகாலமரணமடைந்தால் அனுதாபந் தெரிவிக்கவேண்டியது மனிதப் பண்பு .அனுதாபம் தெரிவிக்காவிட்டாலும், அவன் இறந்தது சரி என்று மகிழும் கயவர்கள் எந்த நாட்டிலும் அரிது. ஆனல் அதற்குமாருக சென்ற வாரம் ஒரு முற்போக்கு வாரப்பத்திரிகை. ஐ. நா. காரியதரிசி விமானவிபத்தில் இறந்ததைப் போற்றியிருக்கின்றது!

அகில உலகமே ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து துக்கக் கடலில் மூழ்கி இருக்கும் வேளையில், 'எல்லோரும் சமம்' என்று போதனை செய்யும் அப் பத்திரிகை "வினைவிதைத்தவன் வினைஅறுப்பான்" என்று ஹமர் ஷீல்டின் மறைவுக்கு 'அனுதாபம்' தெரிவிக்கிறது!— இந்தப்போக்குபனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல அல்லவா இருக்கிறது?

சுன்னுகம் ஜ. தி. சம்பந்தன்

# திரை மறைவில்

## முக்கிய மகாநாடு.

லங்கா சமசமாசக் கட்சியின் முக்கிய மகாநாடு ஒன்று இம்மாதம் பதினைந்தாம் திகதியன்று நடைபெற விருக்கின்றது. அன்று நடைபெறவிருக்கும் மத்திய கமிட்டிக் கூட்டத்தில் தீவிரவாதிகளானஎட்மன்ட் சமரக்கொடி கோஷ்டியினர் தங்களின் பலத்தைக் காட்ட தயாராகி வருகிறார்களாம். லங்கா சமசமாசக் கட்சி அரசாங்க எதிர்ப்பு இயக்கத்தைத் தீவிரமாக்குவதுடன் அரசாங்கத்திற்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டுமென்று கோரும் தீவிரவாதிகளின் தீர்மானமொன்றை மத்திய கமிட்டி விவாதிக்க விருக்கின்றதாம். இத்தீர்மானம் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் பிரதிநிதிகள் மகாநாடு ஒன்று கூட்டப்பட விருப்பதாகவும் அப் பிரதிநிதிகள் மகாநாட்டில் சமசமாசக் கட்சியின் வருங்காலக் கொள்கை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் தெரியவருகிறது.

## மூன்று கோஷ்டிகள்.

லங்கா சமசமாசக் கட்சியில் இப்பொழுது மூன்று கோஷ்டிகளுள்ளன. அவைகள் என். எம். கோஷ்டி கொல்வின்—லெஸ்லி—பேர்னுட் கோஷ்டி, எட்மன் கோஷ்டி என்றும் அழைக்கலாம். அரசாங்கத்துடன் இன்று ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளது என். எம். கோஷ்டி இக்கோஷ்டியில் டாக்டர் என். எம். பெரேரா, திரு. அனில் முனசிங்கா, திருமதி சோம விக்கிரமநாயக்கா ஆகியோரேயுள்ளனர். அரசாங்கத்தை முற்றாக எதிர்க்கவும் கூடாது, ஆதரிக்கவும் கூடாது; ஒவ்வொரு பிரச்சினைகளையும் அதனதன் நன்மைதீமைகளை ஆராய்ந்து அவற்றினடிப்படையில் அரசாங்கத்தை ஆதரிப்பதா அல்லவா என்று முடிவு செய்ய வேண்டும் என்பது கொல்வின்—லெஸ்லி-பேர்னுட் கோஷ்டியின் கொள்கையாகும். டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. லெஸ்லி குணவர்த்தன, திரு. பேர்னுட் சொய்சா, செனட்டர் டொரிக் டி. சொய்சா ஆகியோர் அக்கோஷ்டியிலுள்ளனர். அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்ற கொள்கையையுடையவர்கள் எட்மன்ட் கோஷ்டியினர். திரு. எட்மன்ட் சமரக்கொடி, திரு. மெரில் பெர்னுண்டோ, மற்றும் தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகியோர் இக்கோஷ்டியிலுள்ளனர். எட்மன்ட் கோஷ்டியினருக்கே இப்பொழுது கட்சியில் செல்வாக்கு அதிகமிருப்பதாகத் தெரிகிறது.

## யாவரையும் ஏமாற்றினர்!

தடைசெய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களல்லவா? அவர்கள் தடுப்புக் காவலிலிருக்கும்போது பல நகைச்சுவை ததும்பும் சம்பவங்களும் நடைபெற்றனவாம்! ஒரு நாள் டாக்டர் நாகநாதன் ஓடிப்போய் "நாளைக்கு நாம் விடுதலை செய்யப்படுவோம் என அறிகின்றேன்" என்று சொன்னாராம். அதை நம்பிய மற்றவர்கள் ஏமாந்தார்களாம். எல்லாரையும் ஏமாற்றி விட்டதாக டாக்டர் நாகநாதன் மகிழ்ச்சியடைந்தாராம்.

## 'எத்தனை நாளைக்கோ'!

தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டபோது அவர்களைப் பார்க்கச் சென்றிருந்தேன். கிட்டத்தட்ட ஆறுமாத காலத்துக்குப்பின் விடுதலை கிடைத்ததையிட்டு எல்லாரும் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். ஆனால் தலைவர்களில் ஒருவர் என்னிடம் சொன்னார்:- "இந்த விடுதலை எத்தனை நாளைக்கோ?" என்று.

## அவர்கள் செய்த முடிவு.

தடை செய்யப்பட்ட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இப்போதைக்கு எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்களாம். ஏதாவது ஒரு சாட்டை வைத்துக்கொண்டு அரசாங்கம் தங்களை மறுபடியும் தடுப்புக்காவலில் வைக்க இடம் கொடுக்கப்படாது என்றும் அவர்கள் முடிவு செய்துள்ளார்களாம்.

## தலைவர்கள் அடைந்த மாற்றங்கள்.

தடுப்புக் காவலிலிருந்த தலைவர்களில் இப்பொழுது என்ன மாற்றத்தைக் காணமுடிகிறதாம்? பருத்தித்துறை துரைரத்தினத்திடம் ஒரு கறுத்த மீசை; மட்டக்களப்பு இராசதுரையிடம் தாடியென்ற பெயரில் முகத்தில் அங்குமிங்குமாகச் சில மயிர்கள்; பட்டிருப்பு இராசமாணிக்கத்திடம் ஒரு பருத்த தொந்தி; கிளிநொச்சி சிவசுந்தரத்திடம் சில கைத்தறிச் சால்வைகள்; சாவகச்சேரி நவரத்தினத்திடமும் வட்டுக்கோட்டை அமிர்தலிங்கத்திடமும் ஒரு சில அதிக இருத்தல்கள் (எடையில் கூடியிருக்கின்றனர்); ஊர்காவற்றுறை வி. ஏ. கந்தையாவிடம் சில அதிக நோய்கள்; எல்லாரிடமும் போராட்டம் பற்றிய புதிய அறிவு.

## புத்தகம் எழுதுவார்கள்.

தடுப்புக்காவலிலிருந்த தலைவர்களில் சிலர் தங்களின் அனுபவங்களைப் பற்றிப் புத்தகங்கள் எழுத முடிவுசெய்திருப்பதாக அறிகின்றேன்.

## மாதவியிடம் சிக்கிய கோவலன்.

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. எஸ். இராசதுரை தடுப்புக்காவலிலிருக்கையில் சிலப்பதிகார ஆராய்ச்சி நடத்தினரல்லவா? "மாதவியிடம் சிக்கிய கோவலன்" எனும் பொருள் பற்றி அவர் ஆராய்ச்சிக் கட்டுரையொன்று எழுதுவாரென எதிர்பார்க்கின்றேன்.

## அவர் மகிழ்ச்சியடையவில்லையாம்!

தமிழ் காங்கிரசுக்கு உயிர் ஊட்ட முயற்சிகள் எடுக்கப்படும் இத்தருணத்தில் இரு மாதங்கட்கு முன்பு நடந்த சம்பவமொன்றை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். முன்னாள் உதவியமைச்சர் திரு. எஸ். யூ எதிர்மனசிங்கத்தையும், உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரத்தையும் பத்திரிகையாளர் ஒருவர் அறிமுகம் செய்து வைத்தாராம். "நான் தமிழ் காங்கிரசில் சேர்ந்து போட்டியிட்டவன் தான்" என்றார் திரு. எதிர்மனசிங்கம். "தமிழ்க் காங்கிரசில் சேர்ந்ததையிட்டு நான் அவ்வளவு மகிழ்ச்சியடையவில்லை" என்று பதிலிறுத்தார் திரு. சிவசிதம்பரம்.

—அம்பலத்துறைவோன்

## அந்தோ அணுக்குண்டு!

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வெடிக்கப்படலாம். ஒருவேளை அவை இரகசியமாக இதுவரை வெடிக்கப்பட்டு—நச்சுக் கதிர்கள் உலகத்தின் மேலே பரந்து, பரந்து திரிகின்றனவோ?

ஊழிக்கால ஆரம்பத்தில்—அழிவின் எல்லையில் நின்று உலகம் இன்று கலங்குகிறது! நடுவுநிலைமை நாடுகள் தலையிட்டு நிலைமையை உடனே சீர் செய்யவேண்டும். ஏதாவது ஒரு நெருக்கடியைச் சிருட்டித்துக்கொண்டு அமெரிக்காவும் ரஷ்யாவும் முட்டிக்கொள்ள நேரிடலாம் !— அதனுல் நடுவு நிலைமை நாடுகளைக்கொண்ட ஆசிய ஆபிரிக்க கண்டங்களின் தலைவர்கள் விரைவிலே மேற்கு வல்லரசுகளுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் ஒரு உறவை ஏற்படுத்தி உலக சமாதானத்தை நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டும்; அப்போதுதான் அணு ஆயுத அரக்கனின் பீதியிலிருந்து மனித ஜாதி நிம்மதியடையும்! —கலா

இந்த இதழில் 9-ம் பக்கத்தில் வெளியாகியுள்ள "கம்பர் பிச்சை வாங்க வேண்டும்" என்ற கட்டுரையை எழுதியவர் வே. நவநீதராசு.

நீதிபதிக்கு முன்னால்:

## நவீன கோவலன்!

எதிரிக் கூண்டில் நின்ற முனியம்மா கறுப்பிதான். ஆனால் எந்த அழகுராணியையும் தோற்கடிக்கக்கூடிய அழகிய உடற்கட்டு உடையவள். வசீகரமான இருபத்திமூன்று வயது உடலழகை அப்படியே வெளியே காட்டும் ஜனியர் காஷ்மீர் சேலையை அணிந்திருந்தாள்.

முனியம்மாவின் வழக்கறிஞர் எழுந்தார். மாஜிஸ்திரேட்டைப் பார்த்து முறுவலித்தார். "மரியாதையாக நடந்துகொள்ள முயன்றதன் விளைவாக நாம் எதிரிக் கூண்டில் நிற்கின்றோமையா! எங்களின் கணவனை அவர்கள் பிடித்த தோடல்லாமல் எங்களையும் அவமானப் படுத்தினர்கள் ஐயா!"

மனுதாரர் கறுப்பாயியின் வழக்கறிஞர்:-நாம் எந்தெந்த இடங்களில் நிற்கவேண்டுமோ அந்தந்தஇடங்களில்தான் நிற்கின்றோம் ஐயா! எங்கள் கணவனைத்தான் அவர்கள் பிடித்துக்கொண்டனர்."

மாஜிஸ்திரேட்:-யாரை நம்புவது? இரண்டுபேரும் ஒருவரை மணம் செய்திருந்தால் அந்த நவீன கோவலனை முதலில் கோட்டுக்குக் கொண்டு வரவேண்டும். இருதார மணம் புரிந்ததற்காகத் தண்டிப்பதற்கு! (சிரிப்பு)

கறுப்பாயியின் வழக்கறிஞர்:- எங்கள் கணவர் கோட்டில் தான் இருக்கின்றார் ஐயா! அவரை அழைத்து விசாரித்தால் யார் அவருடைய மனைவி என்பது தெளிவாகிவிடும்.

கோட்டிலிருந்த கறுப்பண்ணசாமி அழைக்கப்பட்டார்.

மாஜிஸ்திரேட்:-(கறுப்பண்ணசாமியிடம்) இவர்கள் இருவரில் யார் உன்னுடையமனைவி?

கறுப்பண்ணசாமி:-இருவரும் தானுங்க! (சிரிப்பு)

மாஜிஸ்திரேட்;- இப்பொழுது இவர்களில் யாருடன் வசிக்கிறாய்!

கறுப்பண்ணசாமி:- இருவரையும் விட்டுவிட்டு நான் வேறொரு பெண்ணுடன் இப்பொழுது வாழ்கின்றேன். சாமி! (பலத்த சிரிப்பு)

மாஜிஸ்திரேட்:- பெண்களுக்கு வாழ்வளிக்க அவதாரமெடுத்திருக்கிறீர் போலும் நீர்! (சிரிப்பு)

கறுப்பண்ணசாமி:-ஆம்சாமி! (நீண்டநேரம் சிரிப்பு)

மாஜிஸ்திரேட்:-நீ இவர்களில் யாரையாவது திருமணப்பதிவு செய்திருக்கிறாயா?

பெரியண்ணசாமி:- அது எல்லாம் எங்களுக்கு ஒத்துவராதுங்க! (மீண்டும் சிரிப்பு)

மாஜிஸ்திரேட்:- உன்னைத் தண்டிக்க சட்டமிடம் கொடாததற்கு வருந்துகிறேன். இரண்டு பெண்களை ஏமாற்றி அவர்கள் உன்னைப்பற்றிச் சண்டைபோடும் போதே வேறு பெண்ணைத் தேடிப் போய்விட்டீர் நீர். இவரை நம்பி நீங்கள் சண்டை போடாதீர்கள் போங்கள்! போய்ச் சமாதானமாய் வாழுங்கள்!

Registered as a newpaper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர்

## 'விற்றால் நட்டம், விற்காவிட்டாலோ பெருநட்டம்!

"ஐந்து ரூபா விலை குறிக்கப்பெற்றுள்ள இந்த நூலின் ஒரு பிரதியை விற்றால், தமக்கு ஐந்து ரூபா நட்டமென்று நூலாசிரியர் கூறினார். ஆனால் விற்காவிட்டாலோ அவருக்குப் பத்து ரூபா நட்டமாகும்! ஆகையால் தமிழன்பர்கள் பத்து ரூபாவையே கொடுத்து இந்த நூலை வாங்கி, ஆசிரியரைக் கௌரவிக்க வேண்டும்."

இவ்வாறு பதிற்றுப்பத்து உரையாசிரியர் பண்டிதர் சு. அருளம்பலவனாருக்கு சென்ற 8-10-61ல் நடைபெற்ற பாராட்டுவிழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறினார்.

ஸ்ரீ லங்கா சாகித்யமண்டலத்தின் ஆயிரம் ரூபா. பரிசு பெற்ற நூல்களில் பதிற்றுப்பத்து உரை நூல் ஒன்றாகும். இந்நூலைஎழுதிய பண்டிதர் அருளம்பலவனாருக்கு அவருடைய சொந்த ஊரான காரை நகரில் மிகப்பிரமாண்டமான பாராட்டுவிழா ஒன்று நடைபெற்றது. பண்டிதமணி அவர்களும் திருவாளர்கள் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அ. அமிர்தலிங்கம் எம். பி., வித்துவான் எவ் எக், ஸி. நடராசா முதலான அநேக தமிழறிஞர்கள் அருளம்பலவனாரைப் பாராட்டிப் பேசினார்கள் ஈழநாடு ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் பொன்னாடைபோர்த்தினார். ஒரு தமிழ் எழுத்தாளரைக் கௌரவிப்பதற்கு இப்படி 'ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருப்பதைக் காண மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்' என்று அவர்குறிப்பிட்டார்.

## போய் வருகிறேன், வணக்கம்!



இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிதிக்காக இராமாயண நாட்டிய நாடகத்தை ஆடிக்காட்டுவதற்கெனத் தனது குழுவினருடன் கொழும்பு வந்திருந்த பிரபல தென்னிந்திய நாட்டிய நடிகை குமாரி ராகினி, தாயகம் திரும்புவதற்கென ரத்மலானை விமான நிலையத்திற்குக் காரில் வந்து இறங்கினார் இலங்கை ரசிகர்களிடம் காருக்குள் இருந்த வண்ணமே வணக்கம் கூறி விடைபெறுகிறார் ராகினி.


# 5-ம் வகுப்பு - வினாப்பத்திரங்கள்.

பரீட்சையில் வருவனபோன்ற மாதிரி வினாப்பத்திரங்களை இந்த மூன்றும் தவணைக் காலத்தில் மாணவர் செய்து பழகுவதனால், பரீட்சையில் மிக இலகுவாக அவர்கள் தேறமுடிகிறது, தமிழ் (பாஷை), கணிதம், சூழல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தனித் தனியாக புத்தக உருவில் இவ் வினாப்பத்திரங்கள் உள்ளன. **விலைகள் மிகக்குறைவு.**

(1) வினாப்பத்திரம் - தமிழ் (பாஷை) சதம் 60
(3) வினாப்பத்திரம் - சூழல் சதம் 60
(2) வினாப்பத்திரம் - கணிதம் சதம் 60
(புதிய முறைப்படி திருத்தியபதிப்பு)
(4) வினாப்பத்திரம் - ஆங்கிலம் சதம் 60

எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)

இலங்கை எங்குமுள்ள அநேக பாடசாலைகளில் இவ்வினாப் பத்திரங்கள் வருடந்தோறும் உபயோகப்பட்டு வருகின்றன. நீங்கள் இதுவரை உபயோகிக்காவிட்டால் உடனே எழுதுங்கள்.

(தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு உண்டு)

## ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னாலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: 'அச்சகம்'